பக்கங்கள்:-21

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | வைகாசி 06 | திங்கட்கிழமை | 20.05.2024 | அதிர்வு 293

## மும்முனை விவாதம் கட்டாயம் வேண்டும்

### டிலான் வலியுறுத்து



எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, தேசிய மக்கள் சக்தியின் 07

# பொது வேட்பாளர் திட்டம்: தமிழரசு இணங்கவில்லை

## கட்சியின் மத்திய குழு வேறு விதமாக முடிவு





வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தும் யோசனைக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழு இணங்கவில்லை.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் உரிய காலத்தில் கட்சி தீர்மானம் எடுக்கும் என்று குறிப்பிட்டு, வேறு விதமாக அது நேற்று முடிவெடுத்திருக்கின்றது. 06

# புலிகள் பேச்சு மேசைக்கு வராமல் யுத்தத்தை தொடர்ந்ததால் அவர்களுக்கு முடிவு கட்டினோம்

## மீண்டும் போர் வேண்டாம் என்று மஹிந்த கூறுகின்றார்



"யுத்தத்தின் கொடுமையான அனுபவங்கள் இல்லாத சூழலில் தற்போது வாழ்கின்றோம். ஆகவே, யுத்தம் பற்றி சிந்திக்கக் கூடாது என ஒருசிலர் குறிப்பிடுகின்றார்கள். இராணுவத்தின் வீரத்துக்கு உயரிய அந்தஸ்து வழங்கி எதிர்காலத்தில் மீண்டும் யுத்தம் தோற்றம் பெறாத வகையில் நாட்டை நிர்வகிப்பது அனைவரினதும் பொறுப்பாகும்."

– இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

"மூன்று தசாப்தங்களாக இலங்கையை ஆக்கிரமித்திருந்த பிரிவினைவாத, பயங்கரவாத யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு 15 ஆண்டுகள் பூர்த்தியடைந்துள்ளன.

1970 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஒரு குழுவாக ஆரம்பமான தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு 07

# ஆளும் - எதிரணி எம்.பிக்கள் பலர் விரைவில் ஐ.தே.கவுடன் இணைவு?

එක්සත් ජාතික පක්ෂය
ஐக்கிய தேசியக் கட்சி
UNITED NATIONAL PARTY

"ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஆளும் - எதிரணி எம்.பிக்கள் பலர் விரைவில் இணையவுள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சியின் கதவு எப்போதும் திறந்தே உள்ளது."

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினரும் ஜனாதிபதி ஆலோசகருமான ஆசு மாரசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் 06




பொது வேட்பாளர் திட்டத்தை தமிழரசு நிராகரித்துவிட்டது. எதிர்பார்க்கப்பட்டதுதான்.

அதை ஆதரிக்கின்றோம் என வெளியில் கூறி வந்த தமிழரசுப் பிரமுகர்கள், தாம் அதை ஆதரித்தோம் என்பது கட்சியின் நேற்றைய மத்திய குழுக் கூட்ட அறிக்கைப் பதிவில் இருப்பதை உறுதிப்படுத்துவதோடு நின்று விட்டனர்.

கட்சிக்கு எதிரான வழக்குத் தொடர்பான விடயம் பேசப்பட்ட போது பந்தை முதலிலேயே சிறிதரன் எம்.பியின் களத்துக்குள் அடித்து விட்டு, அவரை விளையாட விட்டுப் பார்த்திருந்தனர் ஏனையோர். 06

# வழக்காளி கோரும் நிவாரணங்களை வழங்கி தமிழரசுக் கட்சி வழக்கை முடிவுறுத்த முடிவு!

## பொதுவேட்பாளர் தொடர்பில் முடிவில்லை என்கிறார் சிறிதரன் எம்.பி.

(கே.வசந்தன்)

தமிழரசுக் கட்சி நிர்வாக தெரிவுக்கு எதிராக தொடரப்பட்ட வழக்கை வழக்காளி கோரும் நிவாரணங்களை வழங்கி வழக்கை முடிவுறுத்த கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், பொது வேட்பாளர் விடயத்தில் இன்னும் இறுதி முடிவு எட்டப்படவில்லை எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.




தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் வவுனியா, இரண்டாம் குறுக்குத் தெருவில் உள்ள விருந்தினர் விடுதியில் நேற்று இடம்பெற்றது. இதன் பின் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கட்சியின் முக்கிய விடயங்கள் தொடர்பாக ஆராய்வதற்காக மத்தியகுழு கூடி ஆராய்ந்திருந்தது. எமது கட்சிக்கு எதிராக திருகோணமலையில் தொடப்பட்ட வழக்கு தொடர்பாக பேசப்பட்டது. நீண்ட நேரம் அது தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. அந்த வழக்கை வழக்காளி கோருகின்ற நிவாரணங்களை வழங்கி, எமது கட்சியினுடைய நிலைப்பாடுகளையும் நிலை நிறுத்தி, இதுவரை காலமும் கட்சியில் மேற்கொள்ளப்பட்ட யாப்பினுடைய அடிப்படை விதிகளின் திருத்தங்களுக்கு அமைய செயலாற்றி இருக்கின்றோமோ அதனை வலியுறுத்தி யாப்பின் அடிப்படையில் திரும்பவும் தலைவர் தொடக்கம் அனைத்து பதவிகளையும் தெரிவு செய்வது என ஏக மனதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆகவே, வழக்கை கைவாங்குவதற்கான ஒரு முடிவாக எதிராளியாக இருக்கும் நாங்கள் வழக்காளி கோரும் நிவாரணங்களை வழங்கி கட்சியை நாங்கள் எமது கைகளுக்கு கொண்டு வருகின்ற முயற்சியை எடுத்துள்ளோம். இந்த விடயம் தொடர்பாக கையாள்வதற்கு ஜனாதிபதி சட்டத்தரணியும், கட்சியின் மத்திய குழு உறுப்பினருமான கே.வி.தவராசா மற்றும் நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியான எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரை நியமித்துள்ளோம்.

முதலாவது தவணையிலேயே வழக்காளி கோருகின்ற நிவாரணங்களை வழங்க ஒப்புக்கொண்டுள்ளோம். இதில் சில விடயங்களை தவற விட்டுள்ளோம். அதனை சமர்ப்பணங்கள் மூலம் சமர்பித்து, இந்த வழக்கை முடிவுக்குக் கொண்டு வந்து கட்சியை முன்னெடுப்பதாக தீர்மானித்துள்ளோம். அதனடியப்படையில் தற்போது கட்சியின் தலைவராக மாவை சேனாதிராஜாவும், செயலாளராக மருத்துவர் சத்தியலிங்கமும் தொடர்ந்தும் தொழிற்படுவர். வழக்கு முடிவுற்ற பின்னர் புதிய நிர்வாக தெரிவு இடம்பெறும்.

இரண்டாவது விடயமாக பொது வேட்பாளர் தொடர்பாகப் பேசப்பட்டது. அங்கத்தவர்கள் இது தொடர்பில் தமது கருத்துக்களை பதிவு செய்தார்கள். சாதகமான, பாதகமான பல்வேறுபட்ட கருத்துக்கள் உண்டு. கட்சியின் பெருந்தலைவர் சம்பந்தன் ஐயா, கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா ஆகியோரின் கருத்துகளையும் கேட்டறிந்து பரிசீலித்தோம். எல்லோருடைய கருத்துக்களையும் ஒரு ஆலோசனைக்காக எடுத்துள்ளோம். இது தொடர்பாக நாங்கள் தொடர்ந்தும் மத்திய செயற்குழு மற்றும் மாவட்ட குழுக்களுடன் பேசி சிறந்த முடிவை எடுப்போம். – எனத் தெரிவித்தார்.

# தமிழரசுக் கட்சியின் ஊடக சந்திப்பை தவிர்த்துக் கொண்ட சுமந்திரன் எம்.பி.

(கே.வசந்தன்)

வவுனியாவில் தமிழரசுக் கட்சியின் நேற்றைய மத்திய குழுக் கூட்டத்தின் பின் இடம்பெற்ற ஊடக சந்திப்பை கட்சியின் பேச்சாளரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் தவிர்த்துக்கொண்டார்.



தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் தலைவர் மாவை சேனாதிராஜா தலைமையில் காலை 10.30 மணியில் இருந்து மாலை 7 மணி வரை நடைபெற்றது. கூட்ட முடிவில் தீர்மானங்களை அறிவிப்பதற்காக ஊடகவியலாளர்களுக்கு தெரிவித்திருந்த நிலையில் கூட்டம் நிறைவடையும் வரை நீண்ட நேரமாக ஊடகவியலாளர்கள் வெளியில் காத்து நின்றனர்.

கூட்டம் முடிவடைந்ததும் நாடாளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதி சட்டத்தரணியும், தமிழரசுக் கட்சியின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன், முன்னாள் யாழ் மாநகர முதல்வர் ஆர்னோல்ட், பீற்றர் இளஞ்செழியன் உள்ளிட்ட சிலர் வெளியில் வந்தனர்.

இதன்போது ஊடகவியலாளர் ஒருவர் பேச்சாளர் தீர்மானங்களைச் சொல்லாமல் செல்கிறீர்கள் எனக் கேட்ட போது, சுமந்திரன் “அவர்கள் உள்ளே இருக்கிறார்கள். அவர்களிடம் போய் கேளுங்கள்!” – எனக் கூறியிருந்தார்.

ஊடகவியலாளர்கள் மண்டபத்திற்குள் சென்றதும் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் பேச்சாளர் எங்கே என வினவியபோது, ஊடகவியலாளர்கள் அவர் வெளியில் செல்கிறார் எனக் கூற அங்கிருந்தவர்கள் அவரை அழைத்திருந்தார்கள். ஆனாலும் அவர் சமுகமளிக்காது சென்றுவிட்டார்.

கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனைக் கருத்து தெரிவிக்குமாறு கூற அவர் கூட்ட தீர்மானங்களை ஊடக சந்திப்பில் தெரிவித்திருந்தார். சட்ட விடயங்களை கே.வி.தவராசா தெரிவித்திருந்தார்.

இதேவேளை, கட்சியின் செயலாளர் மருத்துவர் ப.சத்தியலிங்கத்தையும் ஊடக மாநாட்டில் அமருமாறு கேட்கப்பட்ட போதும் ஊடக மாநாட்டில் அமராது நின்ற நிலையில் அதனை அவர் அவதானித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# தமிழரசுக் கட்சி வழக்கு தொடர்பில் சுமூகமான முடிவை எட்ட முயற்சி!

## ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா தகவல்

(கே.வசந்தன்)

தமிழரசுக் கட்சி தொடர்பில் சுமூகமான முடிவுகள் எட்டப்படவேண்டும் என்ற அடிப்படையில் எமது செயற்பாடுகள் அமைந்துள்ளன என ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா தெரிவித்தார்.



தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் வவுனியாவில் நேற்று இடம்பெற்றது. இதன்பின்னர் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்–

திருகோணமலை நீதிமன்றில் உள்ள வழக்கை முதல் திகதியிலேயே முடிவிற்கு கொண்டு வரவேண்டும் என்ற அடிப்படையில் நாங்கள் செயற்பட்டோம். இது ஒரு பொதுநல வழக்கு. தற்போது நான்கு மாதங்கள் கடந்துவிட்டன. இறுதியாக நாம் ஒரு தீர்மானத்திற்கு வந்துள்ளோம்.

வழக்காளியின் சட்டத்தரணிகளுடனும், வழக்காளியுடனும் பேசி இந்த விடயத்தினை இணக்கப்பாட்டிற்கு கொண்டு வந்து, வழக்கை முடிவுறுத்துவதற்கான தீர்மானம் ஒன்று எடுக்கப்பட்டுள்ளது. அதற்கு மத்தியகுழு உறுப்பினர்கள் அனைவரும் சம்மதம் தெரிவித்துள்ளனர்.

அதன் பின்னர் மீண்டும் பொதுக் குழுவைக் கூட்டி சுமூகமாக முடிவு எட்டப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டில் எமது செயற்பாடுகள் அமைந்தன என்று தெரிவித்தார்.

இதேவேளை குறித்த விடயங்கள் தொடர்பாக ஆராய்வதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எ.சுமந்திரனும், கே.வி.தவராசாவும் மத்தியகுழுவால் நியமிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# மணற்பிட்டி வால்கட்டு பிரதான வீதி கொங்கிறீட்டில் எட்டரைக் கோடி ரூபா செலவில் புனரமைப்பு வேலை

## ஆரம்பித்து வைத்தார் இராஜாங்க அமைச்சர் சந்திரகாந்தன்

கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும், மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவருமான சிவ. சந்திரகாந்தனின் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சினால் 85 மில்லியன் ரூபா செலவில் மண்முனை தென்மேற்கு பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட மணற்பிட்டி வால்கட்டு பிரதான வீதிக்கான கொங்கிறீட் இடும் பணிகள் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டன.




இந்நிகழ்வில் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட அபிருத்திக் குழு தலைவருமான சிவ. சந்திரகாந்தன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு பணிகளை ஆரம்பித்து வைத்தார்.

இவ்வீதி சுமார் 40 வருடங்களுக்கு மேலாக செப்பனிடப்படாமல் மிகவும் சேதமடைந்து காணப்பட்டதன் காரணமாக இப்பிரதேசத்தில் உள்ள விவசாய நிலங்களுக்கான உள்ளீடுகளை எடுத்துச் செல்லுதல், விளைவிக்கப்பட்ட விவசாய உற்பத்திகளை எடுத்துச் செல்லுதல் உள்ளிட்ட விவசாய நடவடிக்கைகளின் போது விவசாயிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர்.

அத்தோடு வாகனங்கள் பயணிக்க முடியாத நிலையில் இவ்வீதி சேதமடைந்து காணப்பட்டதன் காரணமாக இவ்வீதியினூடாக போக்குவரத்துக்கள் தவிர்க்கப்பட்டிருந்தன. சுமார் 15 கிலோமீட்டர் தூரத்தை கடந்து மாற்று பாதைகளை பயன்படுத்த வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு மக்களும் விவசாயிகளும் தள்ளப்பட்டிருந்தனர்.

இந்த வீதியைச் செப்பனிட்டுத் தருமாறு விவசாய அமைப்புகள் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும், மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவருமான சிவ. சந்திரகாந்தனிடம் முன்வைத்த கோரிக்கையின் அடிப்படையில் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சினால் எட்டரைக் கோடி ரூபா செலவில் 1.7 கிலோ மீற்றர் நீளமான இந்த வீதி செப்பனிடப்படுகிறது.

அதிகளவாக விவசாய தேவைகளுக்காக பயன்படுத்தப்படும் இவ்வீதி செப்பனிடப்படுவதன் ஊடாக 2,000 இற்கு மேற்பட்ட விவசாயிகளும் எண்ணிலடங்கா பொதுமக்களும் நன்மையடைவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிறைவேற்றுப் பொறியியலாளர் எந்திரி ஏ.லிங்கேஸ்வரன், விவசாயத் திணைக்கள உதவித் திட்டமிடல் பணிப்பாளர் கே.ஜெகன்நாத், மண்முனை தென்மேற்கு பிரதேச செயலாளர் சுதாகரன், விவசாய திணைக்களத்தின் பெரும்போக உத்தியோகஸ்தர் உதயகுமார், கொக்கட்டிச்சோலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் பிரதேசக் குழு தலைவர் காமராஜ், செயலாளர் குகநாதன், பட்டிப்பளை பிரதேச விவசாய அமைப்பு தலைவர்களான தட்சணாமூர்த்தி, பிரபாகரன், தாமோதரன், ஒப்பந்தக்காரர்களான ஆனந்தசசு, முருகேஸ்வரன், சுரேஷ் மற்றும் விவசாய அமைப்புகளின் நிர்வாகிகள், விவசாயிகள், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பிரதேச, கிராமிய மட்ட உறுப்பினர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



# சொகுசு வாகன உதிரிபாகங்கள் சட்டவிரோத முறையில் பதிவாம்!

மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் வாகன பதிவு மென்பொருளின் பிரதியை உடனடியாக நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு மோட்டார் போக்குவரத்து திணைக்கள ஆணையாளர் நாயகத்திற்கு கொழும்பு பிரதான நீதிவான் திலின கமகே உத்தரவிட்டுள்ளார்.

கடந்த 15 வருடங்களில் வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட சொகுசு வாகன உதிரிபாகங்கள் சட்டவிரோதமான முறையில் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன என லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு விடுத்த கோரிக்கையை பரிசீலித்த பிரதம நீதிவான் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

இவ்வாறு 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சொகுசு வாகன உதிரிபாகங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன என இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் அதிகாரிகள் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.

இந்த விசாரணைகளின் பின்னர், மோசடியில் ஈடுபடும் நபர்கள் யாராக இருந்தாலும், அவர்களைக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு விசாரணை அதிகாரிகளுக்கு தலைமை நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

# ஜனாதிபதி ரணில் விக்கிமசிங்க தேர்தலில் போட்டியிடமாட்டார்

## உதயங்க வீரதுங்க கூறுகிறார்

"ஒகஸ்ட் முதல் வாரத்தில் நிச்சயமாக நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறும். ஒகஸ்ட் இரண்டாவது வாரத்தில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு, புதிய நாடாளுமன்றம், புதிய பிரதமர், புதிய அமைச்சரவையை தற்போதைய ஜனாதிபதியே நியமிப்பார்."

– இவ்வாறு ரஷ்யாவுக்கான முன்னாள் இலங்கை தூதுவர் உதயங்க வீரதுங்க தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேர்தலில் போட்டியிடமாட்டார் என்பது ஜனாதிபதிக்கு ஆரம்பத்திலிருந்தே தெரியும்.

அதன்படி, ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட்டு வேறொரு கட்சி வெற்றி பெறுமாக இருந்தால், அந்தக் கட்சி நாடாளுமன்றத்தை நிச்சயமாக கலைக்கும் எனவும், அவ்வாறு கலைத்தாலும் கூட எதிர்பார்க்கப்படும் மாற்றம் இரண்டு மாதங்களுக்கு மட்டுமே இருக்கும் எனவும் உதயங்க வீரதுங்க தெரிவித்தார்.

மேலும், இன்று அநேகமான அமைச்சர்கள் தாம் தோற்றுப் போய்விடுவோம் என்ற அச்சத்தில் தேர்தலைச் சந்திக்கும் பயத்திலேயே உள்ளனர்.

இதேவேளை, ஜுன் மாதம் 14 ஆம் திகதி நாடாளுமன்றம் கலைக்கப்படும் எனத் தகவல் கிடைத்துள்ளது. ஒருவேளை நாடாளுமன்ற நடவடிக்கைகள் மூலம் முன்னறே முடியுமாயின், அந்த திகதிக்கு முன்னரே நாடாளுமன்றம் கலைக்கப்படும்.

ஒகஸ்ட் முதல் வாரத்தில் தேர்தலை நடத்துவதற்கான சட்ட ரீதியான அனுமதி கிடைக்கும். 2020 ஆம் ஒகஸ்ட் மாதம் நடத்தப்பட்டதைப்போன்று இவ்வாண்டும் அதே போன்றதொரு திகதியில் பொதுத் தேர்தல் நடத்தப்படும்.




பொஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாராளர் ரணில் விக்கிமசிங்க இல்லையென்பது உறுதி. தமது கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பதை பொதுஜன பெரமுனவின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ சரியான நேரத்தில் நாட்டுக்கு அறிவிப்பார்.

நாடாளுமன்றத் தேர்தலே முதலாவது நடைபெறும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. ஒகஸ்ட் முதல் வாரத்தில் நிச்சயமாக நாடாளுமன்ற தேர்தல் நடைபெறும். ஒகஸ்ட் இரண்டாவது வாரத்தில் புதிய நாடாளுமன்றம், புதிய பிரதமர், புதிய அமைச்சரவையை தற்போதிருக்கும் ஜனாதிபதியே நியமிப்பார். அதேபோன்று ஜனாதிபதி தேர்தல் ஒக்டோபர் மாதம் நடைபெறும்." – என்றார்.

INDSRI FERRY

# வருந்துகின்றோம்

தவிர்க்கமுடியாத கடல் போக்குவரத்து விதிமுறைகளினாலும் காலனிலை மாற்றங்களினாலும் எமது திட்டமிட்ட நாகை – காங்கேசன் – நாகை பயணிகள் கப்பல் சேவையினை இயக்கமுடியவில்லை.

**மிக விரைவில் புதிய பயணத் திகதிகள் அறிவிக்கப்படும்.**

**இதுவரை பயணச் சீட்டை பெற்றவர்கள் செலுத்திய கட்டணத்தினை முழுமையாக மீளளிக்க ஏற்பாடுகள் செய்துள்ளோம்.**

மேலும் விவரங்கள் தேவையெனில் customer.care@sailindsri.com என்ற மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.



## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் விருப்பப்படி – தீர்மானப்படி – முடிவு எடுக்கப்பட்டது.

வழக்குஎப்படியும்சுமுகமாகவும்விரைந்தும் தீர்க்கப்பட வேண்டும் என்று வலியுறுத்திய சி.வி.கே.சிவஞானம், அதற்காக இரண்டு திட்டங்கள் – தீர்வுகள் – இருக்கின்றன, அதில் எந்தத் திட்டத்தை பின்பற்றுவது என்பதை சிறிதரன்தான் தீர்மானிக்க வேண்டும் என்றார்.

திருகோணமலையில், கட்சியின் பொதுக்குழுவின் ஜனவரி 21, 27ஆம் திகதிய கூட்டங்களில் எடுக்கப்பட்ட முடிவுகளை அப்படியே நடைமுறைப்படுத்துவதாக உறுதியளித்தால், வழக்கை இணக்கமாகத் தீர்க்க முடியும் எனத் திருகோணமலை ஆயரின் இல்லத்தில் நடைபெற்ற சமரசக் கூட்டத்தில் வழக்காளி இணங்கினார் என்று கூறப்பட்டது. அதன்படி வழக்கை இணக்கமாகத் தீர்ப்பது – ஒன்று.

அடுத்தது – வழக்காளி கோரிய எல்லா விடயங்களுக்கும் இணங்கி, பொதுக் குழுத் தெரிவு, தலைவர் தெரிவில் இருந்து யாவற்றையும் – ஆரம்பத்தில் இருந்தே – கட்சி யாப்பை மீறாமல் ஒழுங்காக மேற்கொள்வது என்ற இணக்கத்தை – உடன்பாட்டை – வழக்காளியுடன் கண்டு, அதன் அடிப்படையில் நீதிமன்றில் உறுதி மொழி வழங்கி, வழக்கை சமரசமாக தீர்த்துக் கொள்வது.

இதில் இரண்டாவது தெரிவை சிறிதரன் விரும்பியமையால் மத்திய குழு அந்தத் திட்டத்தில் முயற்சிக்கும்படி தீர்மானம் எடுத்தது.

இது பற்றிய விடயங்களை சுமந்திரன், வழக்காளியின் சட்டத்தரணியுடன் பேசித் தீர்க்கலாம் என்று கூறிய போது சுமந்திரன் குறுக்கிட்டு, “இல்லை, இல்லை, எல்லா எதிராளிகளின் சட்டத்தரணிகளும் சேர்ந்து கையாள்வதே முறையானதாக இருக்கும்” என்று சொல்லி, அந்த விடயத்தை கூட்டுப் பொறுப்பாக்கிக் கொண்டார்.

முதலாவது தெரிவை சிறிதரன் எடுத்திருந்தால் அடுத்த வழக்கு தவணைக்குப் பின்னரே அவர் கட்சித் தலைவராகப் பொறுப்பேற்றிருக்கும் சூழல் வந்திருக்கும். இரண்டாவது தெரிவில் புதிய தலைவர் தேர்வாகி, அவர் பதவியேற்க ஒன்று, ஒன்றரை வருடங்களாவது எடுக்கும் என்பது என் கணிப்பீடு.

ஏன் அந்த முடிவை சிறிதரன் எடுத்தார் என்பது அவருக்கே வெளிச்சம்.

இதற்கிடையில், வழமை போல மாவை சேனாதிராஜா கட்சி யாப்பை மீறும் தனது குசும்புத்தனத்தை நேற்றும் காட்டத் தவறவில்லை.

கூட்டத்தின் நடுவே இரண்டு தடவைகள் தாம் கட்சித் தலைவராக நீடிக்க விரும்பவில்லை என்றார் அவர்.

அதில் ஒரு தடவை, ஆகவே சிறிதரன் எனக்குப் பதிலாக தலைவர் வேலையைப் பொறுப்பேற்க வேண்டும் என்றும் கூறினார்.

ஒருவரும் அதற்குப் பதில் சொல்லவில்லை. இப்படித்தான் கட்சி யாப்பை உதாசீனம் செய்யும் பொறுப்பற்ற – தான் தோன்றித்தனமான – போக்கை அவர் தொடர்ந்து வருகின்றார்.

சிறிதரன் கட்சித் தலைமையைப் பொறுப்பேற்பதற்கு நீதிமன்றத் தடை இருக்கின்றது. கட்சித் தலைவரான மாவை அந்த பதவியில் செயல்பட முடியாத இடத்தில் அல்லது செயற்பட விரும்பாதவிடத்து அதற்கு மாற்று ஏற்பாடு என்னவென்பது கட்சி யாப்பிலுள்ளது. அதை மீறி, தம் இஷ்டப்படி ஒருவரைப் பதில் தலைவர் என்கிறார் மாவை சேனாதிராஜா. கட்சியைச் சீரழித்தமை போதாது என்று இருக்கும் எஞ்சிய காலத்திலும் தம் விருப்புக்காக யாப்பை மீறி, கட்சியைச் சின்னாபின்னப்படுத்திவிட்டுப் போவது என்பதில் அவர் குறியாக இருக்கின்றார் என்றே தோன்றுகின்றது.

கட்சியின் பத்திரிகையான ‘புதிய சுதந்திரன்’ பெயரைப் பயன்படுத்தி ஒருவர் இலத்திரனியல் பத்திரிகை வெளியிடுவது பற்றியும் நேற்றைய கூட்டத்தில் பேசப்பட்டது. அந்தப் பெயரை அவர் பயன்படுத்துவது தவறு, அதைத் தடுக்க வேண்டும் என்று ஏகமனதாக முடிவு எடுக்கப்பட்டது. அவருடன் பேசி, அந்தப் பெயரை அவர் பயன்படுத்தாமல் இருப்பதை உறுதிப்படுத்தும் பொறுப்பை மாவை சேனாதிராஜாவும் சிறிதரன் எம்.பியும் கூட்டத்தில் ஏற்றுக்கொண்டனர் எனத் தெரிகிறது.

மாவையால் இந்த விடயத்தை செய்ய முடியும், அதற்கு அவரிடம் திறமை இருக்கின்றது என்று நான் நம்பவில்லை. எனினும் சிறிதரன் கட்சிக்குள் தமக்கு கிட்டியிருக்கும் தகுதி நிலையை வைத்து இதை கையாள்வாரா என்பதைப் பொறுத்திருந்து பார்க்கலாம்.

எது, எப்படி என்றாலும், கட்சி வழக்கின் வரும் 31ஆம் திகதித் தவணையின் போது, நீதிமன்ற அவமதிப்பு விவகாரம் ‘புதிய சுதந்திரனை’ வெளியிடுவரையும் தாண்டி, பிற சட்டத்தரணி ஒருவர் மீதும் பாயும் சாத்தியம் இருப்பதாக நேற்றைய கூட்டத்தில் அமைதிப் பார்வையாளராக இருந்த ஒருவர் பின்னர் தெரிவித்தார்.

இது குறித்து சுமந்திரனிடம் விசாரித்தறியலாம் என்றால் மத்திய குழுக் கூட்டம் முடிந்த நேரத்திலிருந்து ஊடகவியலாளர் சந்திப்பிலும் அவர் மிஸ்ஸிங், எங்கள் தொலைபேசி அழைப்புகளிலும் அவர் சிக்கவில்லை.

ஊடகவியலாளர் சந்திப்பை அவர் புறக்கணித்தமையிலிருந்து ஒரு விடயம் எனக்குத் தோன்றியது.

வாயைக் கொடுத்து, உண்மையைப் பேசி, தம்மை தேசிய விரோதியாகச் சித்திரிக்க இடம் அளிக்காமல், மௌனம் பேணி, முள்ளிவாய்க்காலில் மண்டியிட்டமை போல தேசிய பாதையில் பயணிப்பதுதான் தமக்கு மேல் என்று அவர் கருதிவிட்டார் போலும்.

மௌனம் பேணும் அவர் திட்டத்தில் எங்கள் தொலைபேசி அழைப்புக்களில் சிக்காமல் தவிர்ப்பதும் ஓர் அங்கமோ யாமறியோம்.

நேற்றைய தமிழரசுக் கூட்டம் எதிர்கால அதிர்வுகள் பலவற்றுக்கு வெளியே தெரியாத விதத்தில் – சத்தம் சந்தடியின்றி – விதை போட்டிருப்பதாகத் தகவல் எனக்கு உண்டு.

பார்ப்போம், அடுத்து வரும் நாள்களில்.

## ஆளும் – எதிரணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கூறுகையில்,

“அரசமைப்பின் பிரகாரம் ஜனாதிபதித் தேர்தலே முதலில் நடத்தப்படும். நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கான கால எல்லை இன்னும் வரவில்லை. எனவே, ஜனாதிபதித் தேர்தல் முதலில் என்பது உறுதி. ஒக்டோபர் முதல் வாரம் அல்லது இரண்டாம் வாரத்தில் தேர்தல் நடத்தப்படக்கூடும்.

நாடாளுமன்றத்தைக் கலைக்குமாறு கோரிக்கை விடுக்கும் அதிகாரம் உறுப்பினர்களுக்கு இருந்தாலும், முடிவெடுக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கே உள்ளது. எனவே, நாடாளுமன்றத்தைக் கலைத்து தேவையற்ற பிரச்சினைக்கு அவர் வழி சமைக்கமாட்டார். ஆளுங்கட்சியில் பெரும்பாலான உறுப்பினர்கள் ஜனாதிபதித் தேர்தலையே முதலில் கோருகின்றனர்.” – என்றார்.

## பொது வேட்பாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தமிழரசுக் கட்சியின் கொள்கை ரீதியான முடிவுகளை எடுக்கும் அதிகாரம் கொண்ட மத்திய குழுவின் கூட்டம் நேற்று கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவின் தலைமையில் வவுனியாவில் நடைபெற்றது.

தமிழ்ப் பொது வேட்பாளர் யோசனை குறித்து எதிர்பார்க்கப்பட்டபடி இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதாகத் தெரிய வந்தது.

யாழ்ப்பாணம்மாவட்டஎம்.பியானசி.சிறிதரன் மற்றும் மட்டக்களப்பு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் ஆகியோர் கொள்கை ரீதியாகத் தாங்கள் தமிழ்ப் பொது வேட்பாளர் திட்டத்தை ஆதரிக்கின்றனர் என்றும், அதைத் தங்கள் கருத்தாகப் பதிவு செய்யும்படியும் கேட்டுக்கொண்டனர்.

சி.வி.கே.சிவஞானம், குருகுலராஜா, குலநாயகம், மட்டக்களப்பைச் சேர்ந்த ரஞ்சனி, குகதாசன், கலையரசன், மன்னாரைச் சேர்ந்த பரஞ்சோதி, கோப்பாய் பரஞ்சோதி, இரத்தினவடிவேல், ஆர்னோல்ட், இளஞ்செழியன் போன்றோர் எல்லோரும் தமிழ்ப் பொது வேட்பாளர் திட்டத்தைக் கடுமையாக எதிர்த்தனர்.

விவாதத்தின் முடிவில் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் “உரிய சமயத்தில் கட்சி உரிய முடிவை எடுக்கும். மூன்று பிரதான வேட்பாளர்களின் தேர்தல் அறிக்கைகளையும், அவர்களின் கருத்துக்களையும் கவனத்தில் எடுத்து உரிய வேளையில் முடிவைக் கட்சி எடுக்கும்” – என்று தீர்மானம் நேற்று மேற்கொள்ளப்பட்டதாக அறியவந்தது.

இந்த விவகாரத்தையொட்டி தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்த கருத்துக்கள் சிலவற்றை மாவே சேனாதிராஜா குறிப்பிட்டார்.

தமிழ்ப் பொது வேட்பாளர் திட்டத்தை முன்னெடுத்தால் சிங்கள தரப்பில் தமிழ் எதிர்ப்புணர்வு எகிறும் என்ற சாரப்பட சம்பந்தன் ஐயா தமக்குக் கருத்துத் தெரிவித்தார் என்பதைக் கூட்டத்தில் குறிப்பிட்ட சிறீதரன் எம்.பி., ஆனால் தமிழ்ப் பொது வேட்பாளர் திட்டம் முட்டாள்தனமான யோசனை என்றோ, பைத்தியக்காரத்தனமான யோசனை என்றோ தன்னிடம் சம்பந்தன் குறிப்பிடவில்லை என்றார்.

இது தொடர்பில் நேற்றைய கூட்டத்தில் முடிவு எட்டப்படும் வரை தமிழ்ப் பொது வேட்பாளர் விடயம் குறித்து எம்.ஏ. சுமந்திரன் எம்.பி. கருத்து எதுவும் வெளியிடாமல் அதீத மௌனம் பேணினார் எனக் கூட்டத்தில் பங்குபற்றிய சிலர் தெரிவித்தனர்.

தமிழ்ப் பொது வேட்பாளர் தொடர்பான தீர்மானம் மத்திய குழுவில் எடுக்கப்பட்ட பின்னர் இவ்விடயத்தில் சுமந்திரனின் கருத்து என்ன என்று மாவை சேனாதிராஜா வினாவினார் எனத் தெரிகின்றது.

இவ்விடயத்தையோட்டி சம்பந்தன் ஐயா தமக்குக் கூறிய கருத்துக்களைச் சுமந்திரன் அப்போது விவரித்தார்.

“மூன்று பிரதான கட்சிகளின் வேட்பாளர்களையும் நாம் இப்போதைக்குச் சம தூரத்திலேயே வைத்திருக்க வேண்டும். யாரோடும் நெருங்கத் தேவையில்லை. எங்களின் நிலைப்பாடு யாது என்பதை மூவருக்கும் நாம் தெரியப்படுத்தி விட்டோம். தேர்தல் தொடர்பான அவர்களின் அறிக்கைகள் வரட்டும். அவர்களின் கருத்து நிலைப்பாடுகளைக் கவனத்தில் எடுத்து, உரிய சமயத்தில் நாம் கூடி ஒரு தீர்மானத்தை எடுக்கலாம்.” – என்றார் சுமந்திரன். அதனை எல்லோரும் ஆமோதித்தனர் என அறியவந்தது.

# புத்தளம் இ.போ.ச. பஸ் சாரதி காட்டிலிருந்து சடலமாக மீட்பு

(ரஸீன் ரஸ்மின்)

நிகவெரட்டிய - கந்தேகெதர காட்டுப்பகுதிக்குள் இருந்து ஆண் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளதாக நிகவெரட்டிய தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

நிகவெரட்டிய, ஹுலுகல்ல பகுதியைச் சேர்ந்த டபிள்யூ. எம்.ருவன் சதுரிக (வயது 45) எனும் இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவர் இலங்கைப் போக்குவரத்துச் சபை சாரதி என விசாரணையில் தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவரின் மனைவி தொழில் நிமித்தம் வெளிநாட்டில் இருக்கின்றார். பிள்ளைகள் இருவரும் வேறொரு இடத்தில் தங்கியிருந்து கல்வி கற்று வருகின்றனர். இவர் தனியாக வசித்து வந்ததார் என விசாரணைகளின் போது மேலும் தெரியவந்துள்ளதாகப் பொலிஸார் கூறுகின்றனர்.

நிகவெரட்டிய பிரதேச மரண விசாரணை அதிகாரி ரஞ்சித் தர்மசிறி சம்பவ இடத்திற்குச் சென்று மரண விசாரணையை நடத்தினார்.



சடலம் பிரேத பரிசோதனைக்காக நிகவெரட்டிய ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

நிகவெரட்டிய பிரதேச பொலிஸ் அத்தியட்சகர் வசந்த ஜயமின குமாரவின் பணிப்புரையின் பிரகாரம், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜயந்த குணவர்தனவின் மேற்பார்வையில், நிகவெரட்டிய தலைமையகப் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் இன்ஸ்பெக்டர் திலக் சுபசிங்க மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## எல்ல - வெல்லவாய வீதி திரும்பவும் மூடப்பட்டது




சீரற்ற காலநிலை காரணமாக எல்ல - வெல்லவாய வீதி நேற்று இரவு 8 மணி முதல் இன்று காலை 6 மணி வரை மீண்டும் மூடப்பட்டது.

அனர்த்த முகாமைத்துவ நிலையம் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளது.

இதேவேளை, நாட்டில் நிலவும் அதிக மழைவீழ்ச்சியுடனான காலநிலை காரணமாக அத்தனகலு ஓயாவின் நீர்மட்டம், துனமலே பகுதியில் அதிகரித்துள்ளது.

நீர்ப்பாசனத் திணைக்களம் வெளியிட்டுள்ள புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்காரணமாக அத்தனகலு ஓயாவின் தாழ்நிலப் பகுதிகளில் வசிப்பவர்கள் வெள்ளப்பெருக்கு தொடர்பில் எச்சரிக்கையுடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

## கொழும்புத் துறைமுகம் அருகில் நேற்று தீப்பரவல்



கொழும்புத் துறைமுகத்திற்கு அருகில் நேற்றுத் தீப்பரவல் ஏற்பட்டது.

கொழும்புத் துறைமுக வளாகத்தை அண்மித்த அதிவேக நெடுஞ்சாலையில் பணிபுரியும் ஊழியர்கள் தங்கியிருந்த கட்டடத்தில் இந்தத் தீ பரவியுள்ளது.

சம்பவ இடத்திற்கு 4 தீயணைப்பு வாகனங்கள் அனுப்பி வைக்கப்பட்டன எனக் கொழும்பு தீயணைப்பு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், தீ கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டது. தீ பரவியமைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படாத நிலையில், விசாரணைகள் நடாத்தப்பட்டு வருகின்றன.

## புலிகள் பேச்சு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

2008ஆம் ஆண்டு காலப்பகுதியில் உலகில் பிரபல்யமான பயங்கரவாத அமைப்பாக எழுச்சி பெற்றது.

தற்கொலை மனிதக் குண்டுதாரிகள் மற்றும் சிறுவர் படையணி என்பனவற்றை விடுதலைப்புலிகள் அமைப்பே உலகுக்கு அறிமுகம் செய்தது. தற்கொலைக் குண்டுகள் அடங்கிய சிறிய ரக படகுகள், இரவு நேரங்களில் தாக்குதல் நடத்தக் கூடிய இலகு விமானங்கள் உட்பட ஆயுதங்களைக் கொண்டு வரும் கப்பல்கள் எனப் பலமான கட்டமைப்பில் புலிகள் அமைப்பு செயற்பட்டதை நினைவுகூர வேண்டும்.

இலங்கை மற்றும் இந்திய அரச தலைவர்கள் இருவர் உட்பட இலங்கையின் சிரேஷ்ட அரச தலைவர்கள் மற்றும் சிவில் மக்கள் உள்ளடங்களாகப் பலரைக் கொலை செய்த விடுதலைப்புலிகள் அமைப்புடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட பல்வேறு வழிகளில் அழைப்பு விடுத்தேன். சகல வழிகளையும் நிராகரித்து விடுதலைப் புலிகள் அமைப்பு தாக்குதலைத் தொடர்ந்ததால் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரும் எதிர்த் தாக்குதலைத் தீவிரமாக முன்னெடுத்தோம்.

விடுதலைப்புலிகள் அமைப்புக்கு முடிவுகட்டி யுத்தத்தையும் முடிவுக்குக் கொண்டு வந்து நாட்டில் அமைதியை நிலைநாட்டுவதற்கு முப்படையினர் அர்ப்பணிப்புடன் செயற்பட்டார்கள். 2009.05.18 ஆம் திகதி வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் முழுமையாக இராணுவத்தின் கீழ் கொண்டு வரப்பட்டதைத் தொடர்ந்து 2009.05.19ஆம் திகதி காலை வேலுப்பிள்ளை பிரபாகரன் உயிரிழந்தமை உறுதிப்படுத்தப்பட்டது.

நான்காவது ஈழப் போராட்டத்தை தோற்கடித்தது மாத்திரமல்ல விடுதலைப் புலிகள் அமைப்பில் பணயமாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த பல இலட்சக்கணக்கான சிவில் பிரஜைகள் பாதுகாக்கப்பட்டார்கள்.

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்ட அப்போதைய பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், பாதுகாப்புப் படைகளின் பிரதானி, முப்படைகளின் தளபதிகள், பொலிஸ்மா அதிபர், சிவில் பாதுகாப்புப் படையணியின் பிரதானிகள் மற்றும் முப்படையினர் ஆகியோருக்கும், நாட்டு மக்களுக்கும் முன்னாள் ஐந்தாவது நிறைவேற்றுத் துறை ஜனாதிபதி என்ற அடிப்படையில் கௌரவமளிக்கின்றேன்.

யுத்தத்தின் கொடுமையான அனுபவங்கள் இல்லாத சூழலில் தற்போது வாழ்கின்றோம். ஆகவே, யுத்தம் பற்றி சிந்திக்கக் கூடாது என ஒருசிலர் குறிப்பிடுகின்றார்கள். இராணுவத்தின் வீரத்துக்கு உயரிய அந்தஸ்து வழங்கி நாட்டில் மீண்டும் யுத்தம் தோற்றம் பெறாத வகையில் நாட்டை நிர்வகிப்பது அனைவரினதும் பொறுப்பாகும்." - என்றுள்ளது.

## மும்முனை விவாதம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

தலைவர் அநுரகுமார திஸாநாயக்க ஆகியோருக்கிடையில் நடைபெறவுள்ள விவாதத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவையும் கட்டாயம் இணைத்துக் கொள்ள வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா வலியுறுத்தியுள்ளார்.

இருமுனை விவாதமாக அல்லாமல் குறித்த விவாதம் மும்முனை விவாதமாக அமைந்தால்தான் அது பொருத்தமானதாக அமையும் என்று ஊடகங்களிடம் அவர் தெரிவித்துள்ளார்.

சஜித், அநுரவுக்கு இடையிலான விவாதம் பேசுபொருளாக மாறியுள்ளது. எனினும், விவாதத்துக்கு இன்னும் திகதி நிர்ணயிக்கப்படவில்லை.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# அடுத்தது என்ன?

வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தும் முன்னெடுப்புக்கு நேற்று நடைபெறுகின்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் முடிவுரை எழுதப்படுமா என்று பத்தி எழுத்தாளர் ஒருவர் நேற்றுத் தனது பத்தியில் கேள்வி எழுப்பி இருந்தார்.

தமிழரசுக் கட்சியின் மத்திய குழு கூட்டம் நேற்று வவுனியாவில் சுமூகமாக முடிந்திருக்கின்றது. மேற்படி பொது வேட்பாளர் நிறுத்தும் முன்னெடுப்புக்கு நேற்றைய கூட்டத்தில் முடிவுரை எழுதப்பட்டு விட்டதா என்று கேட்டால் என்ன பதில் வழங்க முடியும்?

'தொட்டால் பூ மலரும்' சினிமாப் படத்தில் வைகைப்புயல் வடிவேலுவும் என்னத்தே கன்னையாவும் பேசும் 'வரும்... ஆனால் வராது' என்ற நகைச்சுவைப் பாணியில்தான் இன்றைய நிலையில் இக்கேள்விக்கும் பதில் அளிக்க வேண்டி இருக்கும்.

பொது வேட்பாளர் முன்னெடுப்புக்கு தமிழரசு முடிவுரை 'எழுதி விட்டது... ஆனால் எழுதவில்லை!' என்றுதான் பதில் தர முடியும்.

நேற்றைய கூட்டத்தில் தமிழரசுக் கட்சி, பொது வேட்பாளர் விவகாரம் தொடர்பில் என்ன முடிவை எடுக்கப் போகின்றது என்பதை அறிய தமிழ்த் தரப்புகள் எல்லாமே ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருந்தன என்பது உண்மை.

ஆனால் அதற்குத் தெளிவான பதிலைத் தராமல், ஒரு தீர்மானத்தை எடுத்திருக்கின்றது தமிழரசு. எனினும் அந்த முடிவுக்குள் பொது வேட்பாளர் முன்னெடுப்புக் கோரிக்கையைப் பரிசீலனைக்கே எடுப்பதில்லை என்ற நிலைப்பாடு மறைமுகமாகப் பொதிந்து கிடப்பதும் கண் கூடு.

'ஜனாதிபதித் தேர்தல் சம்பந்தமாக உரிய நேரத்தில் தமிழரசுக் கட்சி முடிவு எடுக்கும். மூன்று பிரதான கட்சிகளினதும் தேர்தல் அறிக்கைகள் மற்றும் நிலைப்பாடுகளைப் பரிசீலித்து உரிய சந்தர்ப்பத்தில் தமிழரசு கட்சி சரியான தீர்மானத்தை எடுக்கும்' - என்பதுதான் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுவில் நேற்று முன்னெடுக்கப்பட்ட தீர்மானத்தின் வாசகமாக இருந்தது.

பொது வேட்பாளர் விவகாரம் குறித்து இந்தத் தீர்மான வாசகத்தில் வெளிப்படையாக எதுவும் தெளிவாகக் குறிப்பிடப்படாவிட்டாலும், அந்தத் திட்டத்தை முற்றாக நிராகரிப்பதுதான் இதன் அர்த்தம் என்பது வெளிப்படையாக உள்ளது.

ஏதோ கட்சியின் மத்திய குழுவில் பொது வேட்பாளர் திட்டத்தை முன்னெடுக்கும் யோசனை குறித்து ஒரு முடிவும் எடுக்கப்படாதமை போன்றும், அதன் மீது முடிவெடுப்பது ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்ற மாதிரியும் சில தரப்புகள் கருத்துரைத்தாலும், இது விடயத்தில் தமிழரசு கட்சி பெரும்பாலும் ஓர் உறுதியான - தீர்க்கமான - தீர்மானத்தை எடுத்து விட்டது என்பதும், அதில் மாற்றம் செய்வதற்கான வாய்ப்புகள் அடியோடு இல்லை என்பதும் நோக்கர்களின் அவதானமாக இருக்கின்றது.

பொது வேட்பாளரை நிறுத்தும் முடிவுக்கு ஆரம்பத்திலேயே சேர்ந்து தலையசைத்த சில கட்சிகள், எங்கே தமிழரசுக் கட்சி அதை நிராகரிக்கும், அதைக் காரணமாகக் காட்டி தாங்களும் மெல்ல நழுவிக் கொள்ளலாம் என்று காத்திருக்க, அதற்கு இடமளிக்காத விதத்தில் தந்திரமாகத் தமிழரசு கட்சி நேற்று மத்திய குழுவில் ஒரு தீர்மானத்தை எடுத்திருக்கின்றது என்றே தோன்றுகின்றது.

பொது வேட்பாளர் திட்டத்தை ஏற்பதில்லை, ஆனால் அதனை உடனடியாக, பகிரங்கமாக அறிவிப்பதும் இல்லை. அப்படிச் செய்வதன் மூலம் தமிழரசுக் கட்சியைக் காட்டி, அதன் காரணமாகத் தாங்களும் அந்தத் திட்டத்தில் இருந்து விலகுகின்றார்கள் என அறிவிக்க காத்திருக்கும் கட்சிகளுக்கு நெருக்கடி ஏற்படுத்தியிருக்கிறது தமிழரசு கட்சியின் மத்திய குழு.

ஆக, பொது வேட்பாளர் விடயத்தில் தமிழரசுக் கட்சியின் நிலைப்பாடு ஓரளவு தெளிவாகிவிட்டது. பொது வேட்பாளர் என்ற தூக்குக் காவடியை செயற்கைத்தனமாகத் தூக்கிச் சுமந்து கொண்டிருப்பவர்கள் இனி என்ன செய்யப் போகின்றனர்?

தமிழரசு கட்சியையும் அதன் நிலைப்பாட்டையும் ஒட்டி முடிவெடுப்பவர்களை 'நீங்கள்.. போங்கடா... போங்க...!' என்று உதாசீனம் செய்து ஒதுக்கிவிட்டு, தம்பாட்டில் - தம் இஷ்டப்படி - நடந்து, பொது வேட்பாளர் என்ற இந்த விஷப்பரீட்சைக்குள் தமிழினத்தை தள்ளி, தங்கள் குயுக்தித்தனத்தைத் தொடர போகின்றனரா? தமிழினம் பார்த்திருக்கின்றது... !



# மோடி போட்டியிடும் வாரணாசியில் வேட்பு மனுக்கள் பலவும் நிராகரிப்பு

பிரதமர் மோடி போட்டியிடும் வாரணாசி தொகுதியில் தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுக்கள் பலவும் நிராகரிக் கப்பட்டன.

இந்தியாவில் 7 கட்டங்களாக நடைபெறும் மக்களவைத் தேர்தலில், பிரதமர் மோடி போட்டியிடும் வாரணாசி உள்பட 57 தொகுதிகளுக்குக் கடைசிக் கட்டமாக ஜூன் முதலாம் திகதி வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது. அதற்கான வேட்பு மனுத் தாக்கல் மே 7ஆம் திகதி முதல் 14 ஆம் திகதிவரை நடைபெற்றது.

கடந்த முறை பிரதமர் நரேந்திர மோடி வாரணாசி தொகுதியில் போட்டியிட்டு 4.8 லட்சம் வாக்கு வித்தியாசத்தில் வென்றார். அதற்கு முன்பு நடந்த தேர்தலில் வாரணாசி மற்றும் வதோதரா ஆகிய இரு தொகுதிகளிலும் போட்டியிட்டு வென்றார். அதில், வாரணாசியில் 3.72 லட்சம் வாக்கு வித்தியாசத்தில் வென்றிருந்தார். இரு முறை பெரும் வாக்கு வித்தியாசத்தில் வென்றதால் தற்போது 3 ஆவது முறையாக வாராணசியில் களமிறங்குகிறார். வேட்புமனு தாக்கலின் இறுதி நாளான மே 14 ஆம் திகதி, பாஜகவின் கூட்டணிக் கட்சித் தலைவர்கள், பிற மாநில முதல்வர்களுடன் ஊர்வலமாகச் சென்று வேட்புமனுத் தாக்கல் செய்தார்.

வாரணாசி தொகுதியில் மொத்தமாக 55 வேட்பு மனுக்கள் பெறப்பட்டன. அவற்றைச் சரிபார்க்கும் பணி மே 15 ஆம் திகதி நடந்தது. அதில், 38 மனுக்கள் நிராகரிக்கப்பட்டன. குறிப்பாக, ராஜஸ்தானைச் சேர்ந்த ஷ்யாம் ரங்கீலா பிரதமர் மோடி மற்றும் காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி போன்ற அரசியல்வாதிகளை மிமிக்ரி செய்து பிரபலமானவர். இவர் 2014 ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் பா.ஜ.கவுக்கு ஆதரவாக செயல்பட்டார். பின்னர் பா.ஜ.கவுக்கும் பிரதமர் மோடிக்கும் எதிராக விமர்சனங்கள் செய்து வந்தார். இந்த நிலையில், பிரதமர் மோடிக்கு எதிராக வாரணாசியில் போட்டியிட வேட்பு மனு தாக்கல் செய்தார். 'தேர்தல் பிரமாணப் பத்திரத்தில் குறைகள் இருந்ததாலும், வேட்புமனு தாக்கலின் போது பின்பற்றப்படும் நடைமுறை சம்பிரதாயங்களைப் பின்பற்றவில்லை' என்றும் கூறி, அவரது வேட்புமனுவை தேர்தல் ஆணையம் நிராகரித்துள்ளது.

இது குறித்து கருத்து தெரிவித்துள்ள ஷ்யாம் ரங்கீலா, "வேட்புமனு தாக்கல் செய்ய என் வழக்கறிஞரை என்னுடன் அனுமதிக்க தேர்தல் அதிகாரி மறுத்தார். என்னைத் தனிமைப்படுத்தி வேட்புமனுத் தாக்கல் செய்ய வைத்தனர். என் நண்பரைத் தாக்கினர். பிரதமர் மோடி நடிக்கலாம், அழலாம். நான் இங்கு அழப்போவதில்லை. தேர்தல் ஆணையத்தைப் பார்த்து சிரிப்பதா, அழுவதா? எனத் தெரியவில்லை" எனக் கடுமையாக விமர்சித்துள்ளார்.

நடந்து வரும் மக்களவைத் தேர்தலில் குஜராத் மாநிலம் சூரத்தில் பாஜக வேட்பாளர் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டார். பிரதான எதிர்க்கட்சியினரின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டன. எதிரிகளே இன்றி பா.ஜ.க. வேட்பாளர் வெற்றி பெறுவது அக்கட்சியின் பலத்தை மேலும் அதிகரித்து காட்டும் என்று பா.ஜ.க. தலைவர்கள் நம்புகின்றனர்.

நடந்து முடிந்த 4 கட்ட தேர்தலில் பல இடங்களில் பாஜகவுக்குப் பின்னடைவு ஏற்படும் எனக் கணிக்கப்படுகிறது. அதனால் மோடியை எதிர்த்துப் போட்டியிட யாருமில்லை என்பது போன்ற பிம்பம் மீதமுள்ள தொகுதிகளில் தங்களுக்கு வாக்குகளை அதிகரிக்கும் என பா.ஜ.க. நம்புகிறது.

# மக்களவைத் தேர்தலின் 5 ஆம் கட்டம் 49 தொகுதிகளில் இன்று வாக்குப்பதிவு

மக்களவைத் தேர்தலின் 5ம் கட்ட வாக்குப்பதிவு 49 தொகுதிகளில் இன்று இடம்பெறுகின்றது.

மக்களவைத் தேர்தல் 2024 இன் 5 ஆம் கட்ட வாக்குப் பதிவு இன்று காலை தொடங்க உள்ளது. 6 மாநிலங்கள், 2 யூனியன் பிரதேசங்களில் உள்ள 49 தொகுதிகளுக்கு இந்த தேர்தல் நடைபெற உள்ளது. இதில், 695 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

உத்தரப்பிரதேசத்தில் 14 தொகுதிகள், மகாராஷ்டிராவில் 13 தொகுதிகள், மேற்கு வங்கத்தில் 7 தொகுதிகள், பிஹார் மற்றும் ஒடிசாவில் தலா 5 தொகுதிகள், ஜார்க்கண்ட்டில் 3 தொகுதிகள் என 6 மாநிலங்களில் 47 தொகுதிகளில் தேர்தல் நடைபெற உள்ளது. ஜம்மு காஷ்மீர் மற்றும் லடாக் ஆகிய இரண்டு யூனியன் பிரதேசங்களில் தலா ஒரு தொகுதிக்கு இன்று தேர்தல் நடைபெற உள்ளது.

இந்த தேர்தலை முன்னிட்டு, வாக்குப்பதிவுகள் சுமூகமாக நடைபெறுவதற்குத் தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் தேர்தல் ஆணையம் தீவிரப்படுத்தியுள்ளது.

ராகுல் காந்தி (ரேபரேலி), ஸ்மிருதி இராணி(அமேதி), பியூஷ் கோயல்(மும்பை வடக்கு), சிராக் பாஸ்வான்(ஹாஜிபூர், பிஹார்), ஒமர் அப்துல்லா(பாரமுல்லா, ஜம்மு காஷ்மீர்) உள்ளிட்ட பல வி.வி.ஐ.பிக்கள் இந்த தேர்தல் களத்தில் உள்ளனர்.

இதனிடையே, மே 25 ஆம் திகதி நடைபெற உள்ள 6 ஆம் கட்டத் தேர்தலில் 889 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர் என இந்திய தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"ஆறாம் கட்ட வாக்குப் பதிவின்போது 8 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் 58 தொகுதிகளுக்கு தேர்தல் நடைபெறுகிறது. இதில் மொத்தம் 889 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். ஜம்மு-காஷ்மீரின் அனந்த்நாக்-ரஜோரி தொகுதியில் 3ம் கட்ட வாக்குப் பதிவின்போது நடைபெற



இருந்த தேர்தல் ஒத்திவைக்கப்பட்டு 6 ஆம் கட்டத்தில் அந்த தொகுதிக்கு வாக்குப் பதிவு நடைபெறுகிறது. அதில் போட்டியிடும் 20 வேட்பாளர்களும் இதில் அடங்குவர். இந்த தொகுதிக்கான மனுதாக்கல் ஏற்கெனவே நிறைவடைந்து விட்டது.

மற்ற மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களில் உள்ள 57 தொகுதிகளுக்கு மொத்தம் 1978 வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. 6 ஆம் கட்டத்திற்கான வேட்புமனுக்களை தாக்கல் செய்வதற்கான கடைசி திகதி 2024 மே 06 ஆகும். தாக்கல் செய்யப்பட்ட அனைத்து வேட்பு மனுக்களையும் பரிசீலனை செய்ததில், 900 வேட்பு மனுக்கள் செல்லுபடியாகும் என்று கண்டறியப்பட்டது. அதில் மனுக்களை விலக்கிக் கொண்டவர்கள் தவிர இறுதியாக 889 பேர் களத்தில் உள்ளனர்" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆறாம் கட்டத்தில் உத்தரப் பிரதேசத்தில் 14 மக்களவைத் தொகுதிகளுக்கும், ஹரியானாவில் 10 தொகுதிகளுக்கும், பிஹாரில் 8 தொகுதிகளுக்கும், டெல்லியில் 7 தொகுதிகளுக்கும், மேற்கு வங்கத்தில் 8 தொகுதிகளுக்கும், ஒடிசாவில் 6 தொகுதிகளுக்கும், ஜார்க்கண்டில் 4 தொகுதிகளுக்கும், ஜம்மு காஷ்மீரில் ஒரு தொகுதிக்கும் வாக்குப் பதிவு நடைபெறவுள்ளது.




# ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் பயணித்த ஹெலிக்கொப்டர் விபத்துக்குள்ளானது

ஈரானிய ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி பயணித்த ஹெலிக்கொப்டர் விபத்துக்குள்ளானதான அந்நாட்டு அரச ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

அஸர்பைஜான் நாட்டு எல்லையில் உள்ள ஜோல்ஃபா நகருக்கு அருகில் இந்த சம்பவம் நடந்ததாக அந்நாட்டு அரசு ஊடகம் தெரிவித்துள்ளது.

இதன்போது, ரைசியுடன் ஈரானின் வெளியுறவு அமைச்சர் ஹொசைன் அமிரப்டோலாஹியன், ஈரானின் கிழக்கு அஜர்பைஜான் மாகாண ஆளுநர் மற்றும் ஏனைய அதிகாரிகள் பயணம் செய்துள்ளனர் என கூறப்படுகிறது.

அசர்பைஜான் – ஈரான் இடையே பாயும் அரஸ் ஆற்றின் குறுக்கை புதிதாக அணை கட்டப்பட்டுள்ள அணை திறப்பு விழாவிற்காக இப்ராகிம் ரைசி நேற்று அசர்பைஜான் சென்றிருந்தார்.

நாடு திரும்பிக்கொண்டிருந்த இப்ராகிம் ரைசி பயணித்த ஹெலிகொப்டர் மலைப்பகுதியில் விபத்துக்குள்ளானதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஹெலிக்கொப்டர் விபத்துக்குள்ளானதாக கருத்தப்படும் பகுதியில் கடுமையான மழை மற்றும் பனி மூட்டம் இருப்பதால் மீட்புப்பணிகள் தாமதாமாகியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அந்நாட்டு உள்ளூர் அரசாங்க அதிகாரி ஒருவர் சம்பவத்தை விபரிக்க ”விபத்து” என்ற வார்த்தையைப் பயன்படுத்தியுள்ளார். அத்துடன் அரச ஊடகம், ரைசியின் உடல்நிலை குறித்து எந்த தகவலையும் வழங்கவில்லை.

இதேவேளை, ஈரானின் அரச தொலைக்காட்சி, தமது வழமையான நிகழ்ச்சிகளை நிறுத்தியுள்ளது .

நாடு முழுவதும் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசிக்காக பிரார்த்தனைகள் நடத்தப்படுவதையும், திரையின் ஒரு மூலையில், கடுமையான மூடுபனியில் மலைப் பகுதியில் நடந்தே சென்று ஈரானிய ஜனாதிபதியின் உலங்கு வானூர்தி விபத்துக்குள்ளானதான கூறப்படும் இடத்தில் தேடுதல் நடத்தும் மீட்புக் குழுவினரின் நடவடிக்கைகளையும் நேரடியாக ஒளிபரப்பி வருகிறது.

அத்துடன், ஈரானிய ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி மற்றும் அவரது வெளியுறவு அமைச்சர் ஆகியோர் பயணித்த உலங்கு வானூர்தி, அஸர்பைஜான் எல்லைக்கு சென்று திரும்பும் வழியில் கடும் பனிமூட்டம் நிறைந்த மலைப்பகுதியை கடக்கும்போது விபத்துக்குள்ளானதாக ஈரான் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த விபத்தைத் தொடர்ந்து ரைசி மற்றும் வெளியுறவு அமைச்சர் ஹொசைன் அமிரப்டோலாஹியன் ஆகியோரின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்





# இஸ்ரேலுக்குச் செல்லும் ஆயுதக் கப்பல் ஸ்பெயினில் தரிப்பதற்கு அனுமதி மறுப்பு




சென்னையில் இருந்து இஸ்ரேலுக்குச் சென்ற ஆயுதக் கப்பல், ஸ்பெயின் துறைமுகத்தில் நின்று செல்ல அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இந்த கப்பலில் 27 தொன் ஆயுதங்கள் மற்றும் வெடிபொருள்கள் எடுத்துச் செல்லப்படுகிறது என்றும் தகவல் வெளியாகியுள்ளது.

டென்மார்க்கை சேர்ந்த சரக்குக் கப்பல் மரியான் டேனிகா. இந்த கப்பல் சென்னையிலிருந்து கன்டெய்னர்களை ஏற்றிக் கொண்டு கடந்த மாதம் 8 ஆம் திகதி புறப்பட்டு இஸ்ரேலின் ஹைபா துறைமுகத்தை நோக்கிச் சென்றது.

இந்தக் கப்பலில் சித்தார்த்தா லாஜிஸ்டிக்ஸ் என்ற நிறுவனம் கன்டெய்னர்களை அனுப்பியுள்ளது. அந்த கன்டெய்னர்களை இஸ்ரேல் கார்கோ லாஜிஸ்டிக்ஸ் (ஐசிஎல்) நிறுவனம் பெறுகிறது.

செங்கடல் வழியாக இஸ்ரேலுக்கு செல்லும் சரக்கு கப்பல்கள் மீது ஹவுதி தீவிரவாதிகள் டிரோன் மற்றும் ஏவுகணை மூலம் தாக்குதல் நடத்துகின்றனர். இதனால் இந்த கப்பல் ஆப்பிரிக்க நாடுகளை சுற்றிக் கொண்டு ஸ்பெயின் வழியாக இஸ்ரேல் செல்கிறது. தற்போது இந்த கப்பல் மொராக்கோவிலிருந்து ஸ்பெயின் நோக்கி செல்கிறது. வழியில் அந்த கப்பல் ஸ்பெயின் நாட்டின் கர்டஜெனா துறைமுகத்தில் எதிர்வரும் 21 ஆம் திகதி நின்று செல்ல அனுமதி கோரியது.

இந்த நிலையில், ஆன்டிகா மற்றும் பர்புடா நாட்டைச் சேர்ந்த 'போர்கம்' என்ற சரக்கு கப்பல் ஸ்பெயின் துறைமுகத்தில் நின்று செல்ல ஏற்கெனவே அனுமதி கோரியிருந்தது.

அந்த கப்பலில் இஸ்ரேலுக்கு ஆயுதங்கள் கொண்டு செல்லப்படுவதால், அந்த கப்பல் ஸ்பெயின் துறைமுகத்தில் நுழைய அனுமதிக்க கூடாது என்று ஸ்பெயின் பிரதமர் பெட்ரோ சான்செஸ்ஸை, கூட்டணி கட்சியான சுமர் என்ற இடதுசாரிக் கட்சி வலியுறுத்தியது. ஆனால், அந்த கப்பல் இஸ்ரேலுக்கு செல்லவில்லை என்பதும், செக் குடியரசு நாட்டுக்கு ராணுவ தளவாட பொருட்களை கொண்டு செல்கிறது என்றும் தெரியவந்தது.

இந்த நிலையில்தான் மரியான் டேனிகா, ஸ்பெயின் துறைமுகத்தில் நின்று செல்ல அனுமதி கோரியது. அந்த கப்பலில் 27 தொன் ஆயுதங்கள் மற்றும் வெடிபொருள்கள் இருப்பதை கண்டறிந்த ஸ்பெயின், அந்த கப்பல் தங்கள் நாட்டு துறைமுகத்தில் நின்று செல்ல அனுமதி மறுத்துவிட்டது.

இதுகுறித்து ஸ்பெயின் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜோஸ் மேனுவல் அப்பேர்ஸ் கூறும்போது,

இஸ்ரேலுக்கு செல்லும் ஆயுதக் கப்பல், ஸ்பெயினில் தங்கிச் செல்ல அனுமதி மறுப்பது இதுவே முதல் முறை. இது எங்கள் நாட்டின் உறுதியான கொள்கையாக இருக்கும். மத்திய கிழக்கு பகுதிக்கு மேலும் ஆயுதங்கள் தேவையில்லை. அங்கு அமைதிதான் வேண்டும்.–என்றார்.

காசாவில் இஸ்ரேல் ராணுவம் தொடர் தாக்குதல் நடத்துவதற்கு எதிராக ஸ்பெயின் கண்டனம் தெரிவித்து வருவது குறிப்பிடத்தக்கது.

# வான்பரப்பை நீல நிறத்தில் ஒளிரச் செய்த விண்கல்!



நிலவு, நட்சத்திர ஒளிகள், தெருவிளக்கு வெளிச்சம் என இருக்கும் இரவு வானம் திடீரென நீலநிற ஒளியுடன் மிளிர்ந்தால் எப்படி இருக்கும்?

அப்படி ஒரு ஆச்சரிய அனுபவத்தைப் பெற்றிருக்கிறார்கள் போத்துக்கல் மற்றும் ஸ்பெயின் மக்கள்.

இவ்விரு நாட்டு மக்களும் சனிக்கிழமை இரவு வானத்தில் திடீரெனத் தோன்றிய விண்கல், வான்பரப்பை நீல நிறத்தில் ஒளிரச்செய்ததைப் பார்த்துள்ளனர்.

திகைப்பூட்டும் இந்தக் காட்சியைக் கண்ட மக்கள் அதனைத் தங்களின் கமராக்களில் படம் பிடித்து சமூக ஊடங்களில் வைரலாக்கி வருகின்றனர்.

இப்போதுவரை அது பூமியின் எந்தப் பரப்பில் விழுந்தது என்று உறுதிப்படுத்தப்படவில்லை. காஸ்ட்ரோ டெயர் நகருக்கு அருகே அது விழுந்திருக்கலாம் என்று சில அறிக்கைகள் தெரிவிக்கின்றன. சில அறிக்கைள் பின்ஹெய்ரோவுக்கு அருகில் இருந்ததாக கூறுகின்றன.

நாசாவின் கூற்றுபடி, விண்ணில் உள்ள கற்கள் பூமியின் வளிமண்டலத்துக்குள் வேகமாக நுழைந்து எரியும் அந்த நெருப்புக்கோளம் அல்லது எரிநட்சத்திரம் விண்கற்கள் என்று அழைக்கப்படுகின்றன. விண்வெளி பாறைகள், பெரிய அளவிலான தூசுகள், சிறுகற்கள் போன்றவை எரியும் போது அவ்வாறு ஒளி உண்டாகின்றன.

# ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய 'சுரக்ஷா' மாணவர் காப்புறுதி மீண்டும்

பொருளாதார நெருக்கடி காரணமாக தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்த "சுரக்ஷா" மாணவர் காப்புறுதித் திட்டத்தை மீண்டும் ஆரம்பிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

அதன்படி, நாடு முழுவதிலும் உள்ள அனைத்துப் பாடசாலை மாணவர்களும் ஜூன் முதல் வாரத்தில் இருந்து இந்தக் காப்புறுதி திட்டத்தின் கீழ் நன்மைகளைப் பெற முடியும்.

இது தொடர்பில் நிதி,பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைள் அமைச்சர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த ஆகியோரினால் முன்வைக்கப்பட்ட இணை அமைச்சரவைப் பத்திரத்திற்கு அண்மையில் அமைச்சரவை அனுமதி கிடைத்திருந்தது.

சுகாதாரப் பிரச்சினைகள் காரணமாக கல்விச் செயற்பாடுகளை தொடர முடியாத மாணவர்களுக்கு கல்வியைத் தொடர வாய்ப்பளித்தல், அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி பாடசாலை வரவையும் மேம்படுத்தல் உள்ளிட்ட விடயங்களை நோக்கமாக கொண்டு 2017 ஆம் ஆண்டில், அப்போதைய பிரதமர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எண்ணக்கருவுக்கமைய "சுரக்ஷா" மாணவர் காப்புறுதித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

இத்திட்டம் 01.12.2022 வரை தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில்,பொருளாதார நெருக்கடி காரணமாக, இதற்கான நிதியை வழங்குவதில் சிக்கல் ஏற்பட்டதால் இத்திட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது.

எவ்வாறாயினும், நாட்டில் தற்போது பொருளாதார மறுமலர்ச்சி ஏற்பட்டிருக்கும் நிலையில், "சுரக்ஷா" மாணவர் காப்புறுதியை மீண்டும் நடைமுறைப்படுத்துவதற்கு 2024 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் 2000 மில்லியன் ரூபாவை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒதுக்கீடு செய்திருந்தார். 2048 ஆம் ஆண்டளவில் அபிவிருத்தியடைந்த இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கு தேவையான மனித வளங்களை உருவாக்குவதற்கான வேலைத்திட்டத்தை பலப்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

அதன்படி, அரசாங்க பாடசாலைகள், அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகள் மற்றும் பிரிவெனாக்களில் கற்கும் 1– 13 ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கும், 5 – 21 வயது வரையான 45 லட்சம் மாணவர்களுக்கும், விசேட தேவையுள்ள மாணவர்களுக்கான பாடசாலைகளில் பயிலும் 4 – 21 வயது வரையான மாணவர்களுக்கும் மருத்துவ மற்றும் விபத்துக் காப்புறுதி உள்ளிட்ட சலுகைகளும் இந்தத் திட்டத்தின் மூலம் வழங்கப்படும் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

Suraksha
Protect forever the children of nation

# கோடிக் கணக்கான ரூபா பரிசுத் தொகை சுங்க அதிகாரிகளுக்கு வாரி வழங்கலாம்!

## தேசிய கணக்காய்வு அலுவலகம் அம்பலப்படுத்துகிறது




சுங்க அதிகாரிகளுக்கு மற்றும் சுங்க திணைக்களத்துக்கு தகவல்களை வழங்குபவர்களுக்கு நிதி அமைச்சரின் அனுமதி எதுவுமின்றி, அதிகாரிகளின் விருப்பத்திற்கேற்ப 2012ஆம் ஆண்டு தொடக்கம் 2023ஆம் ஆண்டு வரையில் சுமார் 2,422 கோடி ரூபாவுக்கும் அதிகமாகப் பரிசுத் தொகையாக வழங்கப்பட்டுள்ளதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

மேலும், 2021ஆம் ஆண்டு மற்றும் 2023ஆம் ஆண்டுகளில் சுங்க அதிகாரிகளின் மேலதிக நேர கொடுப்பனவாக சுமார் 200 கோடி ரூபா செலுத்தப்பட்டுள்ளதாகவும் அறிக்கை தெரிவிக்கிறது. எனினும், அதன் மூலம் அரசாங்கத்திற்கு வரவு வைக்கப்பட்ட தொகை சுமார் 20 கோடி ரூபா எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சுங்கத்தினால் மேற்கொள்ளப்படும் விசாரணைகளுக்குப் பங்களிப்பு வழங்காத அதிகாரிகளுக்கும் பரிசுத் தொகை வழங்குமாறு உள்ளக கட்டளைகளை உருவாக்கி பரிசுத் தொகை வழங்கப்பட்டுள்ளதாக கணக்காய்வு அறிக்கை வெளிப்படுத்தியுள்ளது.

சாதாரணமான பணிகளை வெளிப்படுத்தப்படுத்தினாலும் கூட, சுங்கத் தவறுகளை கண்டறிதல் எனக் கருதி ஊழியர்களுக்கு பரிசுத் தொகையை வழங்கியுள்ளதாகவும் அதிகாரிகள் சேவைக்கு சமுகமளித்தால் மாத்திரம் கூட அவர்களுக்கு சம்பளம், மேலதிக கொடுப்பனவு போன்றவை வழங்கப்படுவதாகவும் அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

அதன்படி, சுங்க அதிகாரிகளின் நாளாந்த கடமைகளுக்காகவும் மேலதிக கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன.

அனைத்து அரசாங்க உத்தியோகத்தர்களும் தங்களது வருகை மற்றும் வெளியேறுவதைப் பதிவு செய்ய கைரேகையைப் பதிவு செய்யும் இயந்திரத்தைப் பயன்படுத்துவது அவசியம் எனினும், இலங்கை சுங்கத் திணைக்கள அதிகாரிகள் தன்னிச்சையான வருகை ஆவணத்தை மாத்திரம் பயன்படுத்தி வருகின்றனர் எனக் கணக்காய்வு அலுவலகம் வெளிப்படுத்தியுள்ளது.

இந்தத் தகவல்கள் இலங்கையின் சுங்க நிதி மேலாண்மை தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசேட கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



# எலோன் மஸ்க்குடன் ரணில் நேற்றுச் சந்தித்துப் பேச்சு!

இந்தோனேசியாவில் நடைபெறவுள்ள 10 ஆவது உலக நீர் உச்சி மாநாட்டின் உயர்மட்ட அமர்வில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பாலியில் உள்ள குஸ்தி நுரா ராய் சர்வதேச விமான நிலையத்தை நேற்று முன் தினம் சென்றடைந்தார்.

இந்தோனேசிய ஜனாதிபதி ஜோகோ விடோடோவின் அழைப்பின் பேரில், ஜனாதிபதி இந்த விஜயத்தை மேற் கொண்டிருக்கிறார். இதன்போது விமான நிலையத்தில் ஜனாதிபதிக்கு இந்தோனேசிய எரிசக்தி மற்றும் கனிம வள அமைச்சர் அரிபின் தஸ்ரிஃப் இந்தோனேசியாவுக் கான இலங்கைத் தூதுவர் அட்மிரல் பேராசிரியர் ஜெய நாத் கொழும்பகே, இலங்கைக்கான இந்தோனேசி யத் தூதுவர் தேவி குஸ்டினா டோபிங் ஆகியோரால் சிறப்பு வரவேற்பளிக்கப்பட்டது.

இதன் போது இராணுவ அணிவகுப்பு மரியாதையுடன், பாரம்பரிய பாலி நடனக் கலைஞர்களின் நடன நிகழ்வும் இடம்பெற்றது.

10 ஆவது உலக நீர் உச்சி மாநாட்டின் உயர்மட்ட அமர்வு மே 18 – 20 வரை இந்தோனேசியாவின் பாலி நகரில் "கூட்டு செழுமைக்கான நீர்" என்ற தொனிப்பொருளில் நடை பெறவுள்ளதுடன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாளை மே 20 ஆம் திகதி மாநாட்டில் சிறப்புரை ஆற்றவுள்ளார்.

இதேவேளை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் உலகப் புகழ்பெற்ற வர்த்தகர் எலோன் மஸ்க் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பொன்றும் நேற்று இடம்பெற்றது. இலங்கையில் "ஞவயசடமைெ" சேவை வசதியை அமுல்படுத் துவது தொடர்பில் இதன்போது ஆராய்ப்பட்டது.

உலகளாவிய 'Starlink" வலையமைப்புடன் இலங்கையை இணைப்பதற்கான விண்ணப்ப செயல் முறையை விரைவுபடுத்துவது குறித்தும் இந்தச் சந்திப் பில் ஆலோசிக்கப்பட்டது என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.















# இராணுவ நினைவு தின தேசிய நிகழ்வு

15 ஆவது இராணுவ நினைவு தின தேசிய நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

நாடாளுமன்ற மைதானத்துக்கு அருகில் உள்ள இராணுவ நினைவுத் தூபிக்கு முன்பாக இந்த நிகழ்வு இடம்பெற்றது.

பிரதமர் தினேஷ் குணவர்தன, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, பாதுகாப்புப் படைத் தலைவர்கள், படையினர் உள்ளிட்ட பலர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டார்கள்.

இதேவேளை, இராணுவ நினைவு தின தேசிய நிகழ்வை முன்னிட்டு நேற்றுப் பிற்பகல் நாடாளுமன்ற வீதி மூடப்பட்டிருந்தது.













# மேல் கொத்மலை நீர் தேக்கத்தில் நேற்று சடலமாக மிதந்த உயர்தர வகுப்பு மாணவி

(மஸ்கெலியா நிருபர்)

நேற்று முன்தினம் இரவு வீட்டில் படித்துக் கொண்டிருந்த உயர்தர வகுப்பு மாணவியைக் காணவில்லை எனத் தந்தை தலவாக்கலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்ய, அதேநேரம் நேற்றுக் காலை தலவாக்கலை மேல் கொத்மலை நீர் தேக்க பகுதியில் மகள் சடலமாக மிதக்கக் காணப்பட்டார்.



18 வயதுடைய மாணவியான லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாமஸ்டன் ரத்தினகிரியை சேர்ந்த பெரியசாமி திலிஷினா என்பவரே தலவாக்கலை பொலிஸாரால் நேற்று மதியம் சடலமாக மீட்கப்பட்டார்.

இந்த மரணம் தொடர்பில் நுவரெலிய நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பிரேத பரிசோதனைக்காக சடலம் நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது.

# சட்டவிரோதமாக மாணிக்கக்கல் தோண்டியோர் ஓட்டம் அவர்களின் மண் அகழ்வு இயந்திரம், கருவிகள் சிக்கின!

## கெசல்கமுவ ஓயா பகுதியில் சனி இரவு பொலிஸ் திடீர் சுற்றிவளைப்பு

(மஸ்கெலியா நிருபர்)

பொகவந்தலாவை மானெலி வனப்பகுதியிலிருந்து காசல்ரி நீர் தேக்கத்திற்கு நீர் ஏந்திச்செல்லும் கெசல்கமுவ ஓயாவில் சட்டவிரோத மாணிக்கக்கல் அகழ்விற்குப் பயன்படுத்தப்பட்ட மண் அகழ்வு இயந்திரம் ஒன்று கைப்பற்றப்பட்டதாக பொகவந்தலாவை பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் 18ஆம் திகதி இரவு பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பின் போதே இந்த இயந்திரம் கைப்பற்றப்பட்டுள்ளது.




கொசல்கமுவ ஓயா ஆற்றுப்குதியில் இரவு வேளைகளில் சட்ட விரோத மாணிக்ககல் அகழ்வு பணி இடம் பெறுவதாக ஹட்டன் பிராந்தியப் பொலிஸ் தலைமை அதிகாரி நிபுன் தெஹிகமவிற்குக் கிடைத்த தகவலையடுத்து மத்திய மாகாணப் பொலிஸ் அத்தியட்சகர் லலித் பத்திநாயகவின் ஆலோசனைக்கமைய மேற்படி சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

பொகவந்தலாவை பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது நீருக்கடியிலிருந்து மண்ணை உறிஞ்சி எடுக்கும் இயந்திரம், 40 லீட்டர் டீசல் என்பன கைப்பற்றப்பட்டன.

எனினும் மாணிக்கல் அகழ்வில் ஈடுபட்டோர் தப்பியோடினர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மீட்கப்பட்ட இயந்திரம் உள்ளிட்ட பொருள்களை ஹட்டன் நீதிவான் நீதிமன்றில் முன்லைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# வேலணையில. காற்றினால் கோயில் ஓடுகள் பறந்தன!





யாழ்ப்பாணம் வேலணை செல்லக் கதிர்காமம் முருகன் கோயிலில் அதிக காற்று காரணமாக கூரை ஓடுகள் தூக்கி வீசப்பட்டு கோயில் பகுதியளவில் சேதமடைந்தது.

வேலணை பிரதேச செயலாளர் பிரிவில் ஜே 21 கிராம சேவையாளர் பிரிவில் உள்ள ஆலயமே நேற்று முன்தினம் சேதமடைந்தது.

இந்தப் பாதிப்புத் தொடர்பாக யாழ்ப்பாண மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு அறிக்கையிட்டுள்ளது.



# வெள்ளத்தில் மூழ்கியது புத்தளம்

(ரஸீன் ரஸ்மின்)

தொடர்ச்சியாகப் பெய்துவரும் கடும் மழை காரணமாக புத்தளம் மாவட்டத்தில் பல கிராமங்கள் நேற்று வெள்ளத்தினால் மூழ்கியுள்ளன.

இதன் காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

புத்தளம் நகர சபைக்கு உட்பட்ட பல கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. தில்லையடி, ரத்மல்யாய, பாலாவி ஆகிய கிராம சேவகர் பிரிவில் உள்ள பல கிராமங்களும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளன.

மேலும், நாத்தாண்டிய, முந்தல், கற்பிட்டி மற்றும் வன்னாத்தவில்லு ஆகிய பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பல கிராமங்களும், விவசாய நிலங்களும் இவ்வாறு வெள்ளத்திக் மூழ்கியிருக்கின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.

புத்தளம் மாவட்டத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பில் தகவல்களை திரட்டி வருவதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் புத்தளம் மாவட்ட அலுவலகத்தின் கடமைநேர அதிகாரி தெரிவித்தார்.

அத்துடன், தொடர்ச்சியாக பெய்த மழை காரணமாக சிறிய குளங்களும், ஆறுகளும் நிரம்பி அங்கு நீர் மேவிப்பாய்வதாகவும் கூறப்படுகிறது.

இந்த வெள்ளப் பெருக்கு காரணமாக புத்தளம் – பழைய மன்னார் வீதியின் எலுவங்குளம் பகுதியில் உள்ள சப்பாத்து பாலத்திற்கு மேல் வெள்ளநீர் மேவிப்பாய்கிறது.

இதேவேளை, தொடர்ச்சியாக பெய்துவரும் கடும் மழை காரணமாக ராஜாங்கனை மற்றும் அங்கமுவ ஆகிய நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன எனப் புத்தளம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் கடமைநேர அதிகாரி தெரிவித்தார்.

இதன்படி இராஜாங்கனை நீர்த்தேக்கத்தின் இரு வான் கதவுகள் 2 அடி உயரத்திலும், அங்கமுவ நீர்த்தேக்கத்தின் இரு வான் கதவுகள் 3 அடி உயரத்திலும் திறக்கப்பட்டுள்ளன.

இதனால், இராஜாங்கனை நீர்த்தேக்கத்தில் இருந்து வினாடிக்கு 1050 கன அடி நீரும், அங்கமுவ நீர்த்தேக்கத்தில் இருந்து வினாடிக்கு 1,800 கன அடி நீரும் வெளியேறுவதாகவும் புத்தளம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் கடமைநேர அதிகாரி மேலும் தெரிவித்தார்.



















# புத்தளம் மாவட்டத்தில் வெள்ளம் இருபதாயிரம் பேருக்குப் பாதிப்பு

(ரஸீன் ரஸ்மின்)

கடும் மழை காரணமாக புத்தளம் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கினால் 4,759 குடும்பங்களைச் சேர்ந்த 19,128 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என புத்தளம் மாவட்ட செயலாளர் எச்.எம்.எஸ்.பி.ஹேரத் தெரிவித்தார்.

நேற்றும் முன்தினமும் பெய்த கடும் மழை காரணமாக புத்தளம் மாவட்டத்தின் மஹாகும்புக்கடவல, கருவலகஸ்வெவ, மாதம்பை, முந்தல், புத்தளம், சிலாபம் மற்றும் ஆராச்சிக்கட்டுவ ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் உள்ள கிராமங்களில் வாழும் மக்கள் இந்த வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் புத்தளம் பிரதேச செயலகப் பிரிவில் அதிகமான குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. அங்கு 11 கிராம சேவகர் பிரிவில் 4582 குடும்பங்களைச் சேர்ந்த 18,497 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் மாவட்ட செயலாளர் கூறினார்.

அத்துடன், ஆராச்சிக்கட்டுவ பிரதேச செயலகத்திற்குற்பட்ட 3 கிராம சேவகர் பிரிவில் 66 குடும்பங்களைச் சேர்ந்த 256 பேரும், முந்தல் பிரதேச செயலக பிரிவிக்குற்பட்ட 6 கிராம சேவகர் பிரிவில் 101 குடும்பங்களை சேர்ந்த 343 பேரும், மஹாகும்புக்கடவல பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட 2 கிராம சேவகர் பிரிவில் 4 குடும்பங்களை சேர்ந்த 11 பேரும், கருவலகஸ்வெவ, மாதம்பை மற்றும் சிலாபம் ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் 6 கிராம சேவகர் பிரிவில் 6 குடும்பங்களைச் சேர்ந்த 21 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் குறிப்பிட்டார்.

வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களில் 340 குடும்பங்களைச் சேர்ந்த 1,140 பேர் நான்கு பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் எனவும், வசதியற்றவர்களுக்கு அந்தந்தப் பிரதேச செயலாளர்களின் மேற்பார்வையில் பிரதேச செயலக ஊழியர்கள், அரச அதிகாரிகள், பாதுகாப்பு பிரிவினரின் ஒத்துழைப்பில் சுத்தமான குடிதண்ணீர், சமைத்த உணவை வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அத்தோடு, கருவலகஸ்வெவ, மாதம்பை மற்றும் புத்தளம் ஆகிய பிரதேச செயலாளர் பிரிவில் தலா ஒவ்வொரு வீடுகளும், சிலாபம் பிரதேச செயலாளர் பிரிவில் 4 வீடுகளும் வெள்ளத்தால் சேதமடைந்துள்ளன எனவும் அவர் மேலும் கூறினார்.

மேலும், புத்தளம் நகர சபை, புத்தளம் பிரதேச சபைகளுக்குட்பட்ட பகுதிகளில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தொண்டர் அமைப்புக்களும், மஸ்ஜித் நிர்வாகிகளும், சமூக அமைப்பினர்களும் சமைத்த உணவுகளை வழங்கி வருகின்றனர்.

இதேவேளை, தொடர்ச்சியாக பெய்து வரும் கடும் மழை காரணமாக ராஜாங்கனை மற்றும் அங்கமுவ ஆகிய நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன புத்தளம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் கடமைநேர அதிகாரி தெரிவித்தார்.

இதன்படி இராஜாங்கனை நீர்த்தேக்கத்தின் 2 வான் கதவுகள் 2 அடி உயரத்திலும், அங்கமுவ நீர்த்தேக்கத்தின் 2 வான் கதவுகள் 3 அடி உயரத்திலும் திறக்கப்பட்டுள்ளன.

இதனால், இராஜாங்கனை நீர்த்தேக்கத்தில் இருந்து வினாடிக்கு 1,050 கன அடி நீரும், அங்கமுவ நீர்த்தேக்கத்தில் இருந்து வினாடிக்கு 1,800 கன அடி நீரும் வெளியேறுவதாகவும் புத்தளம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் கடமைநேர அதிகாரி மேலும் தெரிவித்தார்.

# புத்தளம் மாவட்டத்திலுள்ள பாடசாலைகளுக்கு விடுமுறை

புத்தளம் மாவட்டத்திலுள்ள அனைத்துப் பாடசாலைகளுக்கும் இன்று விசேட விடுமுறை வழங்கப்பட்டுள்ளது என வடமேல் மாகாண ஆளுநர் தெரிவித்துள்ளார்.

சீரற்ற காலநிலை காரணமாக இன்று இவ்வாறு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நாட்டின் பல பகுதிகளில் இரவு வேளையில் 100 மில்லி மீற்றருக்கும் அதிகளவிலான பலத்த மழைவீழ்ச்சி பதிவாகக்கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

மேல், சபரகமுவ மற்றும் வட மத்திய மாகாணங்களிலும் காலி, மாத்தறை, கண்டி, நுவரெலியா மற்றும் மன்னார் மாவட்டத்தின் சில இடங்களிலும் மழை பெய்யக்கூடுமென எதிர்வு கூறப்பட்டுள்ளது.

மழை பெய்யும் சந்தர்ப்பங்களில் மேற்படி பகுதிகளில் பலத்த காற்றும் வீசக்கூடுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 24 மணித்தியாலங்களில் களுத்துறை - மத்துகம பகுதியிலேயே அதிகளவிலான மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 20.05.2024




இன்றைய நாள் சிறப்பான நாள். நீங்கள் உங்கள் செயல்களை குறித்த நேரத்துக்குள்ளோ அல்லது அதற்கு முன்போ முடிப்பீர்கள். உங்கள் புத்திசாலித் தனத்தை மேம்படுத்த நீங்கள் சாதகமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

பணியிடத்தில் உங்களுக்குள் மறைந்திருக்கும் திறமைகளை பயன்படுத்த வேண்டும். இதன் மூலம் திருப்தி கிடைக்கும், தரமான பணிகளை குறித்த நேரத்தில் முடித்துக் கொடுக்க இயலும்.

உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வீர்கள். இதனால் உங்கள் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

புதிய முதலீடுகளில் பங்கேற்பது போன்ற முக்கிய முடிவுகளை இன்று நீங்கள் எடுக்கலாம். பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.




நீங்கள் இன்று வெளியிடங்களுக்கு செல்வீர்கள். அது உங்களுக்கு உதவியாகவும் ஆறுதலாகவும் இருக்கும். யதார்த்தமான அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது. யோகா அல்லது தியானம் மூலம் அமைதியை பேணுங்கள்.

நீங்கள் இன்று கவனத்துடன் பணியாற்றுவீர்கள். உங்களை மேம்படுத்திக் கொள்ளும் வகையில் பணியாற்றுவீர்கள். இதனால் பணியில் தவறுகள் ஏற்படுவது குறையும்.

உங்கள் துணையுடன் பேசும்போது கவனமாக பேச வேண்டும். எண்ணங்களில் தெளிவும் அதனை பேச்சில் வெளிப்படுத்துவதும் உறவில் நல்லிணக்கத்தை மேம்படுத்தும்.

இன்று அதிகம் செலவாக வாய்ப்புள்ளதால் பண விஷயத்தில் கவனம் தேவை.




இன்று பலன்கள் கலந்து காணப்படும். இன்று மனதில் தெளிவு வேண்டும். வருவதை எதிர்கொள்ளுங்கள். ஆன்மீக நடவடிக்கைகளில் ஈடுபடுவது ஆறுதல் அளிக்கும்.

இன்று வேலைகள் கூடுதலாக இருந்தாலும் நீங்கள் சமார்த்தியமாக செயல்படுவீர்கள். பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள். இன்று சிறப்பான நாளாக இருக்கும்.

இன்று சிறிது உணர்ச்சிவசப்படுவீர்கள். யதார்த்தமான அணுகுமுறை தேவை. உங்கள் துணையுடன் சிறப்பாக தொடர்பு கொள்வதன் மூலம் இருவரிடையே உறவுப் பிணைப்பு வலுப்படும்.

பணத்தை எவ்வாறு கையாள்வதென்று அறிந்து கொள்ள வேண்டும். இதன் மூலம் செலவை கட்டுப்படுத்தி சேமிப்பை அதிகரிக்க இயலும்.




இன்று தியானம் அல்லது பிரார்த்தனை மேற்கொள்வது மிகவும் அவசியம். அதன் மூலம் எதிர்மறை எண்ணங்களை தவிர்க்கலாம்.மேலும் மனதில் உள்ள தேவையற்ற எண்ணங்களை நீக்கி அமைதி பெறலாம்.

நேர மேலாண்மை திறன் மூலம் இன்று வெற்றி காண்பீர்கள். சிறப்பாக திட்டமிட்டால் இன்று அனைத்தும் உங்களுக்கு சாதகமாக இருக்கும். வேலை அதிகமாக இருப்பதாக உணர்வீர்கள்.

உங்கள் இருவரிடையே நல்ல பிணைப்பு ஏற்பட உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். பேசும் போது உங்கள் வார்த்தைகளில் கவனம் தேவை.

இன்று பண வரவு அதிகமாக இருக்காது.




இன்று முன்னேற்றகரமான நாளாக இருக்கும். முறையாக திட்டமிடுவதன் மூலம் வளர்ச்சி காணலாம். இன்று ஆற்றலும் உறுதியும் உங்களிடம் நிறைந்திருக்கும். நீங்கள் முக்கிய முடிவுகளை எடுக்கலாம்.

இன்று உங்கள் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். உங்களிடம் நம்பிக்கையான அணுகுமுறை காணப்படும். அது உங்கள் பணியில் வெளிப்படும்.

நீங்களும் உங்கள் துணையும் இன்று மகிழ்ச்சியுடன் இருப்பீர்கள். அன்பின் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் இருவரிடையே உறவுப் பிணைப்பு வலுப்படும்.

பணம் சம்பாதிக்கும் திறமை மேம்படும். இதன் மூலம் சுதந்திரமான நிதி நிலைமையும் சுய சார்பும் காணலாம்.




இன்று ஆன்மீக ஈடுபாடு சிறந்த பலனைத் தரும். யோகா மற்றும் தியானம் மூலமும் பலன் பெறலாம். இதனால் நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

இன்று பணிகள அதிகம் இருப்பதாக உணர்வீர்கள். சிறந்த யுக்திகளைக் கையாண்டு கவனமுடன் பணியாற்றினால் இன்றைய செயல்களை உங்கள் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ள முடியும்.

உங்கள் துணையுடன் பேசும் போது வார்த்தையில் கவனம் தேவை. உங்கள் துணையுடன் ஒத்துப்போவதும் அவரை மகிழ்ச்சியாக வைத்திருப்பதும் அவசியம். புரிந்துணர்வு மிகவும் அவசியம்.

இன்று செலவுகள் அதிகமாக இருக்கும். செலவுகளை முடிந்த அளவில் கட்டுப்படுத்தி கையிலிருக்கும் பணத்தில் சமாளிப்பது சிறந்தது.




உங்கள் இலக்குகளை அடைவதில் தடைகள் காணப்பட்டாலும் உங்கள் மன தைரியம் மற்றும் உறுதி மூலம் வெற்றி பெறுவீர்கள். பாதைகள் கடினமாக இருந்தாலும் பலன்கள் உங்களுக்கு சாதகமாக இருக்கும். அமைதியாக இருங்கள். வெற்றி நிச்சயம்.

உங்கள் கடின உழைப்பு இன்று உங்களை வெற்றி பெற்ற மனிதனாக்கும். அதிர்ஷ்டத்தை நம்பாமல் உழைப்பை நம்புங்கள். இன்று வேலை அதிகமாக காணப்படும். அதனை நீங்கள் சிறப்பான திட்டத்துடனும் உறுதியுடனும் எதிர்கொள்வீர்கள்.

உறவின் மதிப்பை உங்கள் துணை அறிந்து கொள்ளவும் இருவரும் அவரவர் பொறுப்பை உணர்ந்து கொள்ளவும் சில முக்கியமான விஷயத்தைப்பற்றி இன்று உங்கள் துணையுடன் பேச வேண்டியது அவசியம்.




இன்று உங்களிடம் ஆன்மீக விழிப்புணர்வு காணப்படும். இதன் மூலம் அமைதியும் உங்கள் எண்ணத்தில் தெளிவும் காணப்படும். உங்கள் வெற்றிக்கு இதுவே முதல் காரணமாக அமையும். இன்றைய நாளை சிறப்பாக்குங்கள். உணர்ச்சிகளை கட்டுப்படுத்த முயலுங்கள்.

அன்றாடப் பணிகளைக் கூட இன்று கவனமுடன் கையாள வேண்டும். பணிகள் சிறிது அதிகமாக இருக்கும் என்பதால் நீங்கள் சிறிது பதட்டத்துடன் காணப்படுவீர்கள். பதற்றப்படாமல் அமைதியாக இருக்க வேண்டியது அவசியம்.

உங்கள் மனதில் உள்ள தேவையற்ற தடைகளை நீக்கி உங்கள் துணையுடன் வெளிப்படையாகப் பேச வேண்டும். எதைப் பற்றியாவது தெரியப்படுத்த வேண்டியிருந்தால் மனம் திறந்து பேச வேண்டும்.

# இன்றைய ராசி பலன்கள் - 20.05.2024




இறை வழிபாடும் ஆன்மீக ஈடுபாடும் இன்று உங்களுக்கு வரமாக அமையும். சுய முன்னேற்றத்திற்கான பாதையில் செல்லுங்கள். உங்களுக்கு மாற்றங்கள் ஏற்படும். நீங்கள் விரும்பியதை அடையத் தொடர்ந்து முயற்சி செய்ய வேண்டியது அவசியம்.

இன்று மிகவும் முன்னேற்றகரமான நாள். இன்று புதிய பணிகளுக்கான வாய்ப்புகள் கிடைக்கும். இது உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும்.

உங்கள் இருவரிடையே புரிந்துணர்வு காணப்படும். குடும்ப விருந்து விசேஷங்களில் கலந்து கொள்வதன் மூலம் இன்றைய நாள் மறக்க முடியாத நாளாக இருக்கும்.

இன்று நிதிநிலைமை வளர்ச்சிகரமாக இருக்கும். இன்று உங்களிடம் அதிக பணம் காணப்படும். உங்களுக்கு நீண்ட கால பயன் தரும் விஷயத்திற்கு இன்று பணம் செலவு செய்வீர்கள்.




இன்று மிகவும் உற்சாகமான மகிழ்ச்சியான நாள். இன்று உங்கள் மனதில் திருப்தி நிறைந்திருக்கும்.

பணியிடச் சூழல் இனிமையாக இருக்கும். புதிய வாய்ப்புகள் மகிழ்ச்சியை அளிக்கும். உங்கள் மகிழ்ச்சி காரணமாக நீங்கள் பல மடங்கு திறனுடன் பணியாற்றுவீர்கள்.

உங்கள் துணையை மகிழ்ச்சியாக வைத்திருக்க விரும்புவீர்கள். அவருக்கு பிடித்தமானதை செய்து இருவரும் ஒன்றாக நேரம் செலவு செய்வீர்கள். இதன் மூலம் உங்கள் வாழ்க்கைத் துணையிடம் அன்பைப் பெருக்க உதவும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். இன்று பணம் அதிகமாக சம்பாதிப்பீர்கள். உங்கள் சம்பாத்தியமும் சேமிப்பும் இன்று ஏறுமுகமாக இருக்கும்.




உங்களைச் சுற்றியுள்ளவர்களோடு ஒத்துச் செல்லுங்கள். இன்று ஏழை மற்றும் தேவைப்படுவோருக்கு உணவு அல்லது பணம் அளியுங்கள். இன்றைய நாளை கழிக்க ஏதாவது ஒரு பொழுதுபோக்கு விஷயங்களில் ஈடுபடுங்கள்.

பணியிடத்தில் உங்கள் பொறுமை சோதனைக்குள்ளாகும். அமைதியாக பணிகளை மேற்கொள்ளுங்கள். இதன் மூலம் பிறரின் நன்மதிப்பை பெறுவீர்கள்.

உங்கள் இருவரிடையே எந்தவிதமான அகந்தைப் பிரச்சினையும் வரவிடாதீர்கள். உங்கள் துணையை புரிந்து கொள்ள முயலுங்கள். அவருக்கு ஆதரவு அளியுங்கள். இதன் மூலம் இருவரிடையே உறவுப் பிணைப்பு வலுப்படும்.

இன்று பணத்தை சேமிக்க வேண்டியது முதன்மையானது.




நீங்கள் இன்று உணர்ச்சி பூர்வமான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். விரைந்து முடிவெடுக்காதீர்கள். சூழ்நிலைக்கு தக்கவாறு நடந்து கொள்ளுங்கள். ஆன்மீகத்தில் நாட்டம் கொள்வதன் மூலம் விஷயங்களை எளிதாகக் கையாளலாம்.

இன்று பணிகள் அதிகமாக இருப்பதாக உணர்வீர்கள். அதனை மனதில் கொண்டு வருத்திக்கொள்ளாதீர்கள். விரைவாகவும் எளிதாகவும் பணியாற்றுவதைப் பற்றி சிந்திக்க முயலுங்கள்.

கணவன் மனைவிக்கிடையே புரிந்துணர்வும் அனுசரிப்பும் இருப்பது சிறப்பானது. அவரைப் பற்றிய கணிப்பை குறைத்துக் கொள்வதன் மூலம் உறவை மலரச் செய்யலாம்.

பண விஷயத்தில் பொறுமை தேவை சரியான நேரத்தில் உங்களுக்கு பணம் கிடைக்கும்.








# ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று இந்தோனேசிய அமைச்சருடன் சந்திப்பு





இந்தோனேசியாவிற்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் இந்தோனேசிய கடல்சார் விவகாரங்கள், முதலீடுகளுக்கான ஒருங்கிணைப்பு அமைச்சர் லு/ஹத் பின்சார் பண்ட்ஜாய்டன் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு நேற்று முரசய முரசய டீயடை தீவிலுள்ள "United In Diversity" வளாகத்தில் நடைபெற்றது.

இச்சந்திப்பில், Global Blended Finance Alliance அமைப்பின் நாடுகள், வெப்ப வலயத்திற்கான இலங்கையின் முன்னெடுப்பு, நீலப் பொருளாதாரம் கடற்பாசி தொழில்துறை குறித்து பேசப்பட்டது என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அதேபோல், தென்துருவ நாடுகளுக்கிடையிலான ஒத்துழைப்பு, சதுப்பு நில பயிர்ச்செய்கை தொடர்பான ஒத்துழைப்பு வேலைத்திட்டத்திற்காக ஆராய்ச்சி ஒத்துழைப்பு உள்ளிட்ட நடவடிக்கைகள் தொடர்பிலும் ஆராயப்பட்டது.

ஒருங்கிணைக்க இருதரப்பு பணிக்குழுவை நிறுவுதல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டது. இந்துச சமுத்திர எல்லை நாடுகளில் தற்போதைய தலைவராக இலங்கையின் வகிபாகம் உள்ளிட்ட விடயங்கள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

இந்த சந்திப்பில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி, நீர் வளங்கள் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் ஜீவன் தொண்டமான், காலநிலை மாற்றங்கள் தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜேவர்தன, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன, இந்தோனேசியாவுக்கான இலங்கை தூதுவர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொழம்பகே, காலநிலை மாற்றங்கள் தொடர்பான செயலகத்தின் தலைமை நிறைவேற்று அதிகாரியும். சிரேஷ்ட மேலதிகச் செயலாளருமான வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

இந்தோனேசியா சார்பில் அந்நாட்டின் கடல்சார் விவகாரங்கள் மற்றும் முதலீட்டு ஒருங்கிணைப்பு அமைச்சின் செயலாளர் அயோதாய் ஜி.எல். கலாகே, வனம் மற்றும் சுற்றுச்சூழல் முகாமைத்துவ பிரதி அமைச்சர் நானி ஹெந்தியார்த்தி, உட்கட்டமைப்பு மற்றும் போக்குவரத்து பிரதி அமைச்சர் ரஹ்மத் கைமுதீன், கடல் வளத்துறை பிரதி அமைச்சர் ப்ரீமன் ஹிதாயத், காலநிலை மாற்றம் தொடர்பான சிறப்பு ஆலோசகர் செரி நூர் சலீம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.






# நீதி கோரியும் உரிமை கோரியும் புலம்பெயர் தமிழர்கள் போராட்டம்

முள்ளிவாய்க்காலில் நடந்த இனப்படுகொலைக்கு நீதி கேட்டும், ஈழத் தமிழர் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கக் கோரியும் இலண்டனில் உள்ள தமிழர்கள் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டார்கள்.

முள்ளிவாய்க்கால் படுகொலைக்கு இலங்கை அரசே காரணம் என்று குற்றஞ்சாட்டிய போராட்டக்காரர்கள், இனப்படுகொலைக்கு சர்வதேச விசாரணை அவசியம் என்றும் வலியுறுத்தினார்கள்.

இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்ட தமிழர்கள், பிரிட்டன் பிரதமரின் இல்லமான டவுனிங் வீதியை நோக்கிப் பேரணியாகச் சென்றார்கள்.

தமிழர் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் சிங்களக் குடியேற்றங்களுக்கு எதிராகவும், இராணுவமயமாக்கலை முடிவுக்குக் கொண்டு வருமாறு வலியுறுத்தியும் அவர்கள் கோஷங்களை எழுப்பிப் போராடினார்கள்.

தொடந்து முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையை நினைவுகூரும் வகையில் டவுனிங் வீதிக்கு முன்பாக அமைக்கப்பட்டுள்ள உயிர்நீத்த தமிழர்கள் அடையாள நினைவுச் சின்னத்தில் அவர்கள் மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்கள்.

பிரித்தானிய தமிழர் ஒருங்கிணைப்புக்குழு மற்றும் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் புலம்பெயர் தமிழ்ச் செயற்பாட்டாளர்கள் பலரும் கலந்துகொண்டார்கள்.




